Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 09 புதன்கிழமை (22.01.2014) பக்கங்கள் 20 ஓசை – 113

## மாலைதீவு ஜனாதிபதி நேற்று கொழும்பில்



மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யமீன் அப்துல்லா கயூம் இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு, நேற்று மதியம் கொழும்புக்கு வருகை தந்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பிற்கு அமைய, நாட்டிற்கு வருகைதந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி 23ஆம் திகதிவரை தங்கியிருப்பார்.

இரண்டு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் நேற்று மாலை இருதரப்பு கலந்துரையாடல் நடைபெற்றது. மாலைதீவு ஜனாதிபதி, கைத்தொழில்

19 ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவ் கொலை சூத்திரதாரிகள் மூவருக்கு தண்டனைக்குறைப்பு



முருகன் சாந்தன் பேரறிவாளன்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட மூவருக்கு அந்தத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றமடையும் என இந்திய உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனடிப்படையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனையே ஆயுள் தண்டனையாக மாற்றமடைந்துள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் எனக் கோரி இந்த மூவரும் தாக்கல் செய்திருந்த கருணை மனுவை பரிசீலிப்பதற்கு இந்திய அரசாங்கம் காலம் தாமதித்தமை காரணமாகவே மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றமடைவதாக உயர்நீதிமன்றம் தமது தீர்ப்புக்கு நியாயம் கூறியுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் 25 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கடற்பரப்பில் அத்துமீறித்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 25 இந்திய மீனவர்கள் ஆறு றோலர் படகுகளுடன் நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினரினால் பிடிக்கப்பட்டு யாழ். கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கடற்படையினரினால் பிடிக்கப்பட்ட றோலர்படகுகள் நெடுந்தீவுக்கடற்பரப்பில் இருந்து ஊர்காவற்றுறைத் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு அங்குவைத்து மீனவர்கள் யாழ். கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை விவகாரங்களை கையாள விசேட பிரதிநிதி நியமனம்

## அமெரிக்காவின் ஆகப்பிந்திய ஏற்பாடு

(வோஷிங்டன்)

இலங்கை தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்காக அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் மூத்த இராஜதந்திரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இலங்கை தொடர்பான அனைத்து விவகாரங்களையும் அமெரிக்க அரசின் சார்பில் கையாளுவார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி விசேட பிரதிநிதிக்கான நியமனத்தை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஏற்கனவே உறுதிசெய்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் மூத்த இராஜதந்திரியான சமேலாகே ஹெமா மோட்டோ என்பவரை இவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கிறார்.


இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றம் சுமத்தும் நோக்கில் அமெரிக்க அரசாங்கம் இந்த விசேட பிரதிநிதியை நியமித்துள்ளது. என்றும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டின் போது அமெரிக்கா, இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற ஏற்கனவே திட்டமிட்டுள்ளது.

இந்த சூழலிலேயே மேற்படி விசேட பிரதிநிதி நியமிக்கப்பட்டிருப்பது அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## அழுத்தம் போடுவது பயனற்றது முழுமையான தீர்வுக்கு அவகாசம் தேவை

### ஐஸ்லாந்து ஜனாதிபதி தெரிவிப்பு



உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்ததன் பின்னர் இலங்கையின் அபிவிருத்திகள் பாராட்டத்தக்கது. எஞ்சியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அந்நாட்டு அரசுக்கு காலவகாசம் தேவை. காலவரையறைகள் விதிப்பது பயனற்ற முயற்சி என்று ஐஸ்லாந்து ஜனாதிபதி இலங்கை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

ஐஸ்லாந்து ஜனாதிபதி ஒலாபுர் ரெக்னார் கிறின்ஸன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அபுதாபியில் சந்தித்த போது இதனைத்தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இரு தடவைகள் ஐஸ்லாந்து ஜனாதிபதி இலங்கை ஜனாதிபதியை சந்தித்துள்ளார். மீண்டும் ஒரு சந்திப்பிற்கு வாய்ப்பு கிடைத்ததையிட்டு ஐஸ்லாந்து ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்த வேண்டுமென தெரிவித்த ஐஸ்லாந்து ஜனாதிபதி கடற்றொழில் மற்றும் மீன் உற்பத்திகள் பழச் செய்கை, ஆகியவற்றை வர்த்தக நோக்கில் இலங

19 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் மனிதப்புதைகுழி தொடர்கிறது அகழ்வுப்பணி

### நேற்றுவரை 40 எலும்புக்கூடுகள்

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழி மீண்டும் நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 2 மணிவரை மன்னார் நீதவான் முன்னிலையில் 10ஆவது தடவையாக தோண்டப்பட்டது.

இதுவரை 40 மனித எலும்புக்கூடுகள் முழுமையாகவும், துண்டுகளாகவும் மீட்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மற்றும் நேற்றும் குறித்த பகுதியில் உள்ள வீதி உடைக்கப்பட்டு மனித எலும்புக்கூடுகள் மீட்கும் பணிகள் இடம்பெற்றன.

இதன் போது நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க



08

விருது



18

கட்டுப்பாடு

## பௌதிகத்திட்டமிடல் பிரிவு யாழ். மாநகரசபையில் திறப்பு

யாழ். மாநகர சபையின் கணனிமயப்படுத்தப்பட்ட பௌதிக திட்டமிடல் பிரிவு நேற்று திறந்து வைக்கப்பட்டது. ஆசிய நிதியத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்ட இக் கட்டடத் தொகுதி அதன் தலைவர் டேவிட் டி ஆனோல்ட், மற்றும் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரினால் நாடாவெட்டி திறந்து வைக்கப்பட்டது.

மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து காணிகள், வரைபடங்கள் என்பவற்றின் பாதுகாப்பும் பராமரிப்பும் கணனிமயமாக்கப்பட்டு தற்போது புதிய மெருகுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 1.30 மணியளவில் மாநகர சபைக்கு வந்த ஆசிய பவுண்டேசனின் நிர்வாக உறுப்பினர்கள் மங்களவிளங்கேற்ற நிகழ்வு ஆரம்பமானது


19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் முதலீடுகளை அதிகரிக்க ஐக்கிய அரபு இராச்சியம் விருப்பம்

ஐக்கிய அரபு இராச்சியம் இலங்கைக்கு உதவத் தயாராக உள்ளது என அந்நாட்டின் பிரதமரும் உதவித் தலைவரும் டுபாய் ஆட்சியாளருமான ஷேக் முஹமட் பின் ராஷித் அல் மக்தூம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் உறுதியளித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் பிரதமரிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையொன்று நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இதன்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க



# கிளிநொச்சியின் பெருமைபேசும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகமும் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்தும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் நிகழ்வு நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வரவேற்புரையை மாவட்ட கலாசார அதிகாரி மா.அருள்சந்திரன் நிகழ்த்த உள்ளார்.

முதலாம் நாள் நிகழ்வு கரைச்சி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது. முதல் நாள் அமர்வுக்கு யாழ் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் தலைமை தாங்க உள்ளார்.

இரணைமடுக் குளத்தோடு இணைந்த குடியேற்ற வரலாறு எனும் ஆய்வுக் கட்டுரையை கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்கள பிரதம பொறியியலாளர் சுதாகரனும், கிளிநொச்சி மாவட்டத்தின் குடிசனத்தொகை போக்கு ஒரு பார்வை எனும் தலைப்பில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும், கிளிநொச்சி மாவட்ட பூர்வீக மக்களும் பண்பாடும் எனும் தலைப்பில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணமும், உருத்திரபுரீஸ்வர சிவன்கோயில் வரலாறு எனும் தலைப்பில் யாழ். உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் க.செல்வமனோகரனும், கிளிநொச்சியின் பண்பாட்டுத் தொன்மையும் தொல்லியல் மூலங்களும் எனும் தலைப்பில் பேராசிரியர் செ.கிருஸ்ணராசாவும்,

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஊர்ப்பெயர்களில் மூலிகைகள் எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை முதுநிலை விரிவுரையாளர் எஸ். சிவசண்முகராஜாவும்,

கிளிநொச்சி மாவட்ட நிர்வாக வரலாறு எனும் தலைப்பில் கண்டாவளை பிரதேச செயலாளர் க.முகுந்தனும்,

கிளிநொச்சி மாவட்ட குடிப்பொருளாதாரம் எனும் தலைப்பில் மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அமரசிங்கம் கேதீஸ்வரனும், கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச ரீதியிலான கவிதை வளர்ச்சிப் போக்கு எனும் தலைப்பில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.மதுரநாயகமும்,

பரந்தன் பிரதேசங்களில் உள்ளடங்கும் கிராமங்களின் வரலாறு எனும் தலைப்பில் ஓய்வுநிலை அதிபர் ம.பத்மநாதனும் ஆய்வுக் கட்டுரைகளை வழங்க உள்ளனர். நன்றியுரையை பண்பாட்டுப் பேரவையின் உப செயலாளர் பெ.கணேசன் நிகழ்த்த உள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வு கிளிநொச்சி வலயக் கல்வித்திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.மதுரநாயகத்தின் தலைமையில் மாவட்ட செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (90)

## நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மீள் அறிவித்தலுக்கமைய விண்ணப்பித்த வேலைத்தொழிலாளர்களுக்கான நேர்முகப்பரீட்சை இன்று பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் உரிய நேரத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் தபாலில் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (பா,இ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் 2014 ஆம் ஆண்டிற்கான முதலாவது மாதாந்த பொதுக்கூட்டம் நாளை முற்பகல் 10 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (பா,இ)

## சதுரங்கப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் நடத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான நடப்பாண்டுக்கான சதுரங்கப்போட்டியின் ஆரம்பவிழா இன்று இடம்பெறுகிறது.

யாழ்.இந்துக்கல்லூரி மண்டபத்தில் காலை 11.30 மணிக்கு இவ் ஆரம்பநிகழ்வு இடம்பெறும். இதில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கிறார். (இ)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1027 — திகதி 20.01.2014

வெற்றி எண்கள்: 02 33 46 60 — ஆங்கில எழுத்து: Q

ஜக்பொட் பரிசு ரூ. 1,97,84,420/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,97,84,420/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7 | 50,000/= | ரூ. 3,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 272 | 1,000/= | ரூ. 2,72,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 488 | 1,000/= | ரூ. 4,88,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12017 | 60/= | ரூ. 7,21,020/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6234 | 40/= | ரூ. 2,49,360/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 158771 | 20/= | ரூ. 31,75,420/= |
| ஆங்கில எழுத்து | 23139 | 20/= | ரூ. 4,62,780/= |
| | | மொத்தம் ரூ. | 67,18,580/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| திருக்கோணமலை | 605606326-5-25 |
| கிளிநொச்சி | 605608905-0-10 |
| நுவரெலியா | 605603402-4-44 |
| புத்தளம் | 605601889-2-32 |
| அநுராதபுரம் | 605612992-0-20 |
| கம்பஹா | 605610866-7-07 |
| அம்பாறை | 605602403-0-30 |
| வவுனியா | 605616462-1-41 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 71,18,580/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 20,094,420/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.01.23 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

தொலைபேசி: 2 333546/7

(C/3264)




வடமராட்சி கிழக்கு அம்பன் பிரதேசத்தில் மகேஸ்வரி நிதியத்தின் உதவியுடன் அம்பன் கிராம முன்னேற்றச் சங்கத்தினால் கஜு மரக்கன்றுகள் நாட்டப்படுகின்றன. இந்நிகழ்வினை அம்பன் கிராம முன்னேற்றச் சங்க தலைவர் இரஞ்சநாதன் ஆரம்பித்து வைத்துள்ளார் இன்நிகழ்வில் மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளர் த.றஜீவ் மற்றும் அம்பன் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

## வேலணை பிரதேசசபை, வேலணை

### 2014 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி - 22.01.2014 - 27.01.2014 காலை 10.00 மணிவரை.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 27.01.2014 மதியம் 12 மணி

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி - 27.01.2014 மதியம் 12.30.

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், வேலணை பிரதேச சபை, வேலணை.** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையில் இடது பக்க மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் முற்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென வேலணைப் பிரதேசசபையின் தலமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மறு பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.** என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேற்படி மீள் கேள்விக்கான கேள்விப்பத்திரங்கள் கோர விரும்புபவர்கள் 8.11.2013 ஆம் திகதிய உதயன் நாளிதழில் வெளியிடப்பட்ட வேலணை பிரதேச சபை 2014 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல் என்ற தலைப்பின் கீழ் தரப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய கேள்விகளுக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டக்கொள்ளப்படுகிறீர்கள்.

| இல | சந்தையின் பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணம் (VAT தவிர்த்து) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் (VAT தவிர்த்து) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (VAT தவிரத்து) |
|---|---|---|---|---|---|
| 01. | புங்குடுதீவு மாட்டிறைச்சிக் கடை | - | 2000.00 | 10.000.00 | 475376.00 |
| 02. | புங்குடுதீவு - குறிகட்டுவான் வாகனத்தரிப்பிடம் | - | 2000.00 | 10,000.00 | 1,000,000.00 |
| 03. | வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | - | 500.00 | 5000.00 | 44,165.00 |
| 04. | அம்பிகைநகர் மீன் சந்தை | - | 500.00 | 5,000.00 | 33,000.00 |
| 05. | வேலணை சரவணை மீன் சந்தை | - | 500.00 | 5,000.00 | 14,250.00 |
| 06. | வேலணை மொத்த மீன் விற்பனை நிலைய கடை இல 02. (கடற்தொழில் உபகரணங்கள் விற்பனை) | 1,300.00 | 500.00 | - | 15,000.00 |

சி.சிவராசா
தவிசாளர்,
பிரதேச சபை
வேலணை.

(C/3323)

# கலைத்துறையில் ஈடுபாடுடையவர்கள் தொழில்நுட்ப அறிவையும் பெறவேண்டும்

## நூற்றாண்டுவிழாவில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண




(யாழ்ப்பாணம்)

கலைத்துறையில் ஈடுபாடு உடையவர்களாக விளங்குபவர்கள் கலைத்துறையோடு இணைந்த வகையில் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவினையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் கல்வித்துறை சார்ந்தோர் ஆதரவு வழங்க வேண்டும். என விஞ்ஞான தகவல் தொழில் நுட்பத்துறை சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நூற்றாண்டு நினைவு முத்திரை வெளியீட்டு நிகழ்வு கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ண பிள்ளை தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் கல்விக்கொள்கையில் மாற்றத்தினைக் கருத்தில் எடுக்க வேண்டும்.

இலங்கை மட்டுமல்ல உலகின் அனைத்து நாடுகளும் தொழில்நுட்ப யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. உங்களுடைய பிரதேசத்தில் தகவல் தொழில் நுட்ப அபிவிருத்தியினை அரசாங்கம் படிப்படியாக மேற்கொண்டு வருகின்றது. இதற்கான பூரண ஆதரவினை நாம் வழங்கிக்கொண்டு வருகின்றோம். நனோ தொழில்நுட்பம் உயர்தொழில்நுட்பம் என்பவற்றில் நாம் அக்கறை கொண்டு எம்மை முன்னேற்ற வேண்டும். இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாணவர்கள் மரபுசார்ந்த கலைத்துறையில் ஈடுபாடுயுடையவர்களாக விளங்குகின்றார்கள்,

நூற்றாண்டு விழாநிகழ்வானது வரலாற்றினை மீட்டுப் பார்க்கின்ற சம்பவமாக அமைகின்றது.

பிரித்தானிய காலணித்துவத்தில் இந்த மதம்சார் கற்கைநெறிக்கும் மொழிசார் கற்கை நெறிக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் சேர் பொன். இராமநாதனால் பெண்களுக்காக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த காலவரலாற்றினை 100 ஆண்டுகள் கழித்து நாம் மீட்டுப் பார்க்க வேண்டும். கலைத் துறைசார் பாடங்களைப் போதிப்பதில் இராமநாதன் கல்லூரிக்கு தனித்துவமான இடம் உண்டு. இசை, நடனம், மொழி இலக்கியம் போன்ற துறைகள் சிறப்பாக கற்பிக்கப்பட்டன.

மிகச்சிறந்த வரலாற்றுப் பாடசாலையின் நூற்றாண்டு விழாவில் மாணவிகள் உயர்ந்த நிலையை அடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எங்களுடைய் பெறுமதியினை சேர்க்கும் வகையில் இவ்வாறான நிகழ்வுகள் அமைகின்றன என்றார். (63,48)

# வட்டு . இந்துவாலிபர் சங்கத்தால் மாணவர்களுக்கு கல்விக்கான உதவி



(சண்டிலிப்பாய்)

வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாரதி பெண்கள் இல்ல மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் இல்லத்தில் வசிக்கின்ற மாணவிகளின் பாவனைக்கென 71 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 அலுமாரிகளும் மாணவி ஒருவரின் கல்வி நடவடிக்கைக்காக 10 ஆயிரம் ரூபா பணமும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவியின் கல்வி நடவடிக்கைக்காக ஐயாயிரம் ரூபா பணமும் கற்றல் உபகரணமும் மற்றும் இல்லத்திற்கென முப்பதாயிரம் ரூபா பணமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து இல்லமாணவிகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் விரிவுரையாளர் ஜெ.லக்ஸ்மன், வீதி அபிவிருத்தி அதிகார சபைபொறியியலாளர் எஸ்.சஞ்சீராஜன், சமூகசேவையாளர் எஸ்.சபாநாதன், நில அளவையாளர் ஞா.கேதீஸ் இலங்கைக்காப்புறுதி கூட்டுத்தாபன யாழ்.கிளை சந்தைப்படுத்தல் முகாமையாளர் அ.சபேசன் மற்றும் இந்துவாலிபர் சங்க அங்கத்தவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (54)

## அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அபிராமிப்பட்டர் விழா எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிற்பகல் 3.30 மணிக்கு அபிராமிப்பட்டர் உறியில் அமர்ந்து அபிராமி அந்தாதி ஓதுதல், 4.30 மணிக்கு பூரணை நிலவுத் தரிசனமும் பட்டருக்கு அம்பாள் காட்சி கொடுத்தலும், மாலை 5 மணிக்கு வசந்த மண்டபபூசையும் மாலை 5.30 மணிக்கு அம்பாளுடன் அபிராமிப்பட்டார் திருவீதியுலா வருதல் என்பனவும் இடம்பெறவுள்ளது.

# வடக்கு மாகாணசபைக்கு முடக்குவாதமா?




வடக்கு மாகாணசபைக்கு முடக்குவாதம் ஏற்பட்டுள்ளது போலத் தெரிகிறது. மாகாணசபையைக் கைப்பற்றிய போது ஏதோ மாபெரும் சாம்ராஜ்ஜியத்தைக் கைப்பற்றியதாக கொண்டாட்டங்கள் நடந்தன.

சிலருடைய நெஞ்சு மூன்று நான்கு அடிகள் முன்னுக்குத் தள்ளி நிமிர்ந்திருந்தன. இப்பொழுது அவர்கள் எல்லாம் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு திரிகிறார்கள்.

தேர்தல் முடிவுகள் வெளியாகிய அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்திரிகை ஒன்று "அமைந்தது தமிழர் அரசு" என்று தலைப்புச் செய்தியை வெளியிட்டுப் பெருமைப்பட்டுக்கொண்டது.

இப்பொழுது அந்தப் பத்திரிகை மாகாணசபையின் பீத்தல், பிறுதல்களை மூடிமறைக்கப் படாத பாடெல்லாம் பட்டுக்கொண்டிருக்கிறது.

என்னதானிருந்தாலும் கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்குத் தான் என்ற கதை உண்மையாகி வருகிறது.

மாகாணசபையைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய போதே இப்படித்தான் நடக்கும் என்று பலருக்கும் தெரியும். அதிலும் விசயம் விளங்கியவர்களுக்கு என்ன நடக்கப்போகிறது என்று நன்றாகத் தெரியும்.

ஆனால், வரலாற்றை மறந்து விடுவோருக்கு – இனவாத முறுக்கேறியோருக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை. இவர்களுடைய கண்களை இனவாதப்போதை மறைத்து விட்டது.

எனவே என்ன நடக்கிறது, என்ன நடக்கப்போகிறது என்று எதுவுமே விளங்கவில்லை.

ஆனால், தவறுகள் என்றும் தண்டனைகளை வழங்கியே தீரும். தவறுகள் என்றும் பாதிப்புகளையே ஏற்படுத்தும்.

இதுதான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.

மாகாணசபையைக் கைப்பற்றி ஆட்சி நடத்த முனைந்தவர்கள், ஆரம்பத்தில் அங்கும் மிங்குமாக ஓடியோடிக் கட்டடங்களைத் திறந்தார்கள். கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். மரங்களை நட்டார்கள். பார்த்தீனியம் பிடுங்கினார்கள்.

அவ்வளவுதான்... எல்லாம் நாலு நாட்களுக்குள் அடங்கி விட்டன.

இப்பொழுது யாரையும் காணவில்லை. ஒன்றையும் காணவில்லை.

மாகாணசபையை இயக்கும் பொறிமுறையைப் பற்றிச் சிந்திக்காமல் வழமையான அரச எதிர்ப்புப் புராணம் பாடினால், இப்படித்தான் நடக்கும் என்று இப்பொழுது இவர்களுக்கு விளங்கியிருக்கிறது.

ஆனாலும் இதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

இதனால்தான் சில நாட்களுக்கு முன்னர் மாகாணசபையின் அதிகாரிகளின் மீது 'மாகாணசபையை இயக்குவதற்கு ஒத்துழைக்கிறார்கள் இல்லை' என பெரும்பழி சுமத்தப்பட்டது.

என்றாலும் இந்தப் பழியை ஒரு நியாயமாக ஏற்றுக்கொள்ள மக்கள் தயாரில்லை.

எனவே மீண்டும் பிரச்சினை தலைதூக்கியது.

இதைச் சீர்ப்படுத்தவே விக்கினேஸ்வரன் முயன்றார். அதன்படி ஜனாதிபதியைச் சந்தித்தார்.

தன் ஆட்களுக்கு வகுப்பெடுத்துப் பார்த்தார். என்றாலும் இது மட்டும் மாற்றங்களை உருவாக்கி விடப்போவதில்லை என்று விளங்கிக் கொண்டு சோர்ந்துபோனார்.

இப்போது –

மக்களை அரச எதிர்ப்பு உணர்வில் 'மெயின்டெயின்' பண்ணுவதே அடுத்த தேர்தலுக்காகச் செய்யப்பட வேண்டிய வேலை என்று, ஏற்கனவே 'பழந்தின்று ருசிகண்ட' தலைவர்களின் வழியிலேயே அவரும் இணைந்துகொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

பதவிகளை அதிகாரங்களை எடுத்துவைத்துக்கொண்டு, அரசை மிரட்டிக்கொண்டிருப்பதே போதும் என்பதாக ஒரு அரசியல் கலாசாரத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இது தலைமைக்குரிய பண்பல்ல.

மக்களை மனதார நேசிக்க வேண்டும். அவர்களுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். அதற்காக முயற்சிக்க வேண்டும்.

இத்தகைய பண்பு வளர்ந்தால்தான் ஏதாவது உருப்படியாக நடக்கும்.

இல்லையென்றால், பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதைதான்.

உண்மையாக நடந்துவரும் மனிதனுக்கு எந்த உபதேசமும் தேவையில்லை. - வாரியார்


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU



இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com


## சமூக ஏற்றத்திற்கான கல்வி!

நேற்று (21-1-2014) ரஷ்யப் புரட்சியின் பிதாமகரான தோழர் லெனின் நினைவுதினம். புரட்சி வெற்றிபெற்ற பின் 1918 செப்டம்பரில் அவர் ஆற்றிய உரையொன்றின் தமிழாக்கத்தை இணையத்தில் பார்க்க நேர்ந்தது. அதில் அவர் சொல்கிறார்:

*"கல்வி என்பது நாம் இப்போது மேற்கொண்டிருக்கிற போராட்டத்தின் முக்கிய பகுதிகளில் ஒன்றாகும். உண்மையில் பள்ளிக்கூடங்கள் என்பவை முதலாளிகளின் வர்க்க ஆட்சியின் ஒரு கருவியாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறொன்றுமல்ல.*

*அவை முழுமையாக முதலாளித்துவ வகுப்பாரின் சிந்தனையுடன் ஊடுருவிப் பரவியிருக்கின்றன. அவற்றின் குறிக்கோள் முதலாளிகளுக்கு கூழைக் கும்பிடு போடும் ஊழியர்களையும் சிறந்த தொழிலாளர்களையும் உற்பத்திசெய்து அளித்திட வேண்டும் என்பதேயாகும்.*

*நவீன தொழில்நுட்பத்தின் வியக்கத்தக்க கண்டுபிடிப்புகள் லட்சக்கணக்கான தொழிலாளர்களை பூண்டோடு அழிக்கவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் முதலாளிகளுக்கு மட்டுமீறிய லாபத்தை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பதையும் யுத்தம் நமக்குக் காட்டியிருக்கிறது.*

*கற்பது என்பது தங்களுடைய ஏகபோக உரிமை என்றும் சாமானிய மக்களின் மீது அதிகாரத்தைச் செலுத்துவதற்கான ஒரு கருவி என்றும் முதலாளித்துவ வர்க்கம் கருதிக் கொண்டிருக்கிறது. அவர்கள் கல்வியை சோசலிஸ்ட் கட்டுமானப் பணிகளைப் பயனற்றதாக்கிட உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள்.*

*எனவே இன்றையதினம் அறிவுத்தாகம் எடுத்து வரும் அனைத்து மக்களுக்கும் கல்வியை அளிக்க வேண்டியது நம் முதல் கடமையாகும். மக்கள்மீது உண்மையான அன்பு கொண்டிருக்கும் அனைவரும் சிறந்த ஆசிரியர்கள் அனைவரும் அவர்களுக்கு உதவிட முன்வர வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொள்வோம்..."*

தன்னைச் சுற்றியிருக்கும் மனிதர்களைப் பற்றியே கவலைப்படாத ஒரு புதிய சமுதாயத்தை இன்றைய கல்விமுறை வளர்த்து வருகிறது என்பது இன்று நம் கூடுதலான கவனத்துக்குரியது. மற்றவர்களைச் சமமாக மதித்தல், சமூகவாழ்வுக்கான கூட்டுப் பொறுப்புணர்வு என்பதையெல்லாம் புரியவைப்பதாக இருக்க வேண்டும் கல்வி.

பரந்த உள்ளமும், பண்பாடும் வளர்க்க வேண்டிய கல்விமுறை பணம் பண்ணும் தொழிலாகச் சுருங்கிவிட்டது. மனித மாண்புகளை வளர்ப்பதற்குப் பதிலாக, மதிப்பெண் வாங்கும் இயந்திரமாக மனிதர்களை மாற்றிவிட்டது. இயந்திரம் போல இதயம் இல்லாத மாணவர்களை உருவாக்குவதால் என்ன பயன்?

"நான் வாழ்வதற்காக என் தந்தைக்குக் கடமைப்பட்டுள்ளேன்; நன்றாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டுள்ளேன்" என்று கிரேக்க மாவீரன் அலெக்சாண்டர் அவனது ஆசிரியர் அரிஸ்ரோற்றில் குறித்துக் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

சமூகத்தில் நடைபெறும் குற்றச்செயல்கள், அக்கிரமங்களுக்கும் நமது கல்விமுறைக்கும் சம்பந்தம் இருக்கிறது. மனிதர்களிடையேயான சமத்துவத்தை வரவேற்காத அதிகாரவர்க்கம் தனக்குப் பணிவுள்ள குடிமக்களையே இந்தக் கல்விமுறையால் வளர்க்கிறது.

சமூக அநீதிகள் குறித்துக் கேள்வியெழுப்பாத இளைஞர்களையே ஒழுக்கமானவர்கள் என்பதாக வரையறுக்கிறது. "எங்கு எது நடந்தாலும் கண்டு கொள்ளாதே" என்பதுதான் இந்தக் கல்வி அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த பாடம்.

மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதற்குத் தேவையான சமூகம்சார் போதனைகள் இல்லாமல், பரீட்சைப் புள்ளிகளுக்கான மனப்பாடப் படிப்புடன் வெளியேறுபவர்களால் ஆனது இந்த சமூகம். கேள்வியும் பதிலுமாக பாடமர்க்கி பரீட்சைக்குத் தயாராகுவது தவிர, வேறு புத்தகங்களோ சிந்தனைகளோ மாணவர்களுக்கு வேண்டாத ஒழுக்கமாகவே கட்டுப்படுத்தப்படுகிறது.

மாணவர்களை இளைஞர்களை சமூகத்திலிருந்து அந்நியப்பட வைப்பதாக கல்வி அமையவேண்டாம்; சமூகத்தின் அங்கமான தங்களால்தான் இங்கு மாற்றங்கள் வரவேண்டும் என்று அவர்கள் உணரவேண்டும்.

- ஆசிரியர்.

# குற்றங்கள் குறைந்த மாகாணமாக வடக்கு

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர்

(கொழும்பு)

நாட்டின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில், வட மாகாணத்தில் குற்றங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. மேல் மாகாணத்திலேயே அதிகளவான குற்றங்கள் இடம் பெறுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும். அவ்வாறு பதிவு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் எமக்கு அறிவிக்க முடியும்.

தமிழ் மொழியில் கடமையாற்றுகின்ற போது, அது போதுமானதாக அமையவில்லை. எனினும், நாம் அதனை முன்னேற்றிக் கொள்கின்றோம். எமது பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் வட மாகாணத்தில் குற்றங்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. மேல் மாகாணத்திலேயே அதிகளவான குற்றங்கள் இழைக்கப்படுகின்றன.

மனிதப் படுகொலைகள் குறித்து நோக்கும் பட்சத்தில், இந்தப் பகுதிகளில் குறைந்தளவான சம்பவங்களே பதிவாகின்றன. ஏனைய பகுதியில் அதிகமாகவுள்ளன என்றார்.

# உணவு ஒவ்வாமையால் 20 மாணவர்கள் மருத்துவமனையில்

(கொழும்பு)

உணவு ஒவ்வாமையால் திடீர் சுகவீனமடைந்த ஏறாவூர் றஹ்மானிய்யா வித்தியாலயத்தைச் சேர்ந்த 20 மாணவர்கள் ஏறாவூர் வைத்தியசாலையில் நேற்றுக்காலை அனுமதிக்கப்பட்டனர்.

பாடசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையில் உணவு உட்கொண்ட மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து அப்பாடசாலைக்கு வந்த ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி, டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் சிற்றுண்டிச்சாலையை பரிசோதித்து சிற்றுண்டிச்சாலையை மூடுமாறு பணித்ததுடன் உணவு மாதிரிகளை பொரளையிலுள்ள ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊக்குவிப்பு உற்பத்தித்திறன் அமைச்சர் பசீர் சேகுதாவூத், ஏறாவூர் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொண்டு மாணவர்களின் நிலைமை குறித்து கேட்டறிந்துகொண்டார்.

# ஒருபில்லியன் இழப்பீடு வழங்குமாறு பிரதமருக்கு ஹெல உறுமய கடிதம்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித்த தேரரை அவமதித்தமைக்கு ஒரு பில்லியன் ரூபா இழப்பீடு வழங்குமாறு பிரதமர் டி.எம் ஜயரத்னவிற்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இழப்பீடு வழங்கத் தவறினால், பிரதமருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்து, பணத்தை அறவிட நேரிடும் என ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டுள்ள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓமல்பே சோபித்த தேரர் சார்பில், டியுட்டர் பெரேரா இந்தக் கோரிக்கைக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

கம்பளையில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில், பிரதமர் தெரிவித்த கருத்தினால், ஓமல்பே சோபித்த தேரர் மீது மக்கள் கொண்டுள்ள கௌரவம் மற்றும் மரியாதைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

# சிறைக்குள் போதைப்பொருள்; சிறைக் காவலர்கள் உடந்தை

## புலனாய்வுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

சிறைச்சாலைக்குள் போதைப் பொருள் கொண்டு செல்லப்படுவது குறித்து புலனாய்வுப் பிரிவினருக்கு பல தகவல்கள் கிடைத்துள்ளன.

போதைப் பொருள் சிறைக்குள் கொண்டு செல்லப்படும் சம்பவங்களுடன் சிறை பாதுகாவலர்களுக்கு தொடர்பு இருப்பதாக சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெலிக்கடை மற்றும் கொழும்பு மகசின் சிறைக் காவலர்கள் 7 பேருக்கு இதில் தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது. மஹர சிறையில் 50 கிராம் போதைப் பொருளுடன் சிறைக்காவலர் ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மஹர சிறைக்காவலர்கள் மூவருக்கு போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது. இதனையடுத்து சிறைச்சாலைகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# பொலிஸ் தலைமையகம் முன்பாக குடும்பசகிதம் விவசாயி போராட்டம்

(கொழும்பு)

அநுராதபுரம் விவசாயி ஒருவர் தனது மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளுடன் கொழும்பு பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளார். 'பாம் ஹவுஸ்' என்ற பெயரில் தான் நடத்திய விவசாய நிலத்திற்கு எதிராக பெண் ஒருவர் மற்றும் அநுராதபுரம் பொலிஸார் இணைந்து செயற்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

தனக்கு எதிராக திட்டமிட்டபடி பொலிஸில் 79 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த பெண் நாளொன்றுக்கு 5 என்ற அடிப்படையில் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதாகவும் போராட்டம் செய்யும் விவசாயி தெரிவித்துள்ளார்.

மெல்லமெல்ல வளர்ந்து வரும் தன்னுடைய வளர்ச்சியை பொறுக்காத சிலர் பொலிஸாருடன் இணைந்து தனக்கு எதிராக திட்டமிட்டு செயற்படுவதாகவும் பொலிஸ் மா அதிபரிடம் இருந்து தனக்கு நியாயம் எதிர்பார்ப்பதாகவும் விவசாயி குறிப்பிட்டுள்ளார். இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகளுடன் தன்னை வீதியில் தள்ள எடுக்கப்படும் முயற்சியை முறியடித்து தனக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என விவசாயி கோரியுள்ளார்.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 61

**வே.அர்ச்சுணன்**

**போரின் இறுதி நாட்களைத் திசை திருப்பும் ஒரு இராணுவ நடவடிக்கையாக எல்லாளன் படையின் நடவடிக்கை அமைந்திருந்தது. பிரபாகரன் தானே நின்று நெறிப்படுத்திய படையணி அது. இப்படையணியின் அனுராதபுர விமானப் படைத்தளத் தாக்குதல் பிரசித்தி பெற்றிருந்த ஒன்றாகும். அரசாங்கத்துக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்திய தாக்குதல் இதுதான். பிரபாகரனின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் ஏன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட வேண்டும்? அதற்கான காரணம் என்ன? ஏனென்றால் விடுதலைப் புலிகளால் நடத்தப்படுகின்ற தாக்குதல்களுக்கான திட்டங்களை வகுக்கும் பொறுப்பையும், நடத்தும் பொறுப்பையும் துறைசார் தளபதிகளிடம் கையளிக்கும் போது அவ்வொவ்வொரு தாக்குதல்கள் குறித்த செய்திகளையும் தளபதிகள் இராணுவத்திற்கு வழங்குவதிலும் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதிலுமே பின்னாட்களில் கவனமாக இருந்து வந்தனர். இதனால் பிரபாகரனால் திட்டமிடப்பட்டு தளபதிகளிடம் கொடுக்கப்பட்ட தாக்குதல்கள் பல தோல்வியில் முடிவடைந்தன.**



அமெரிக்காவின் சி.ஐ.ஏ யால் கொடுக்கப்பட்ட துல்லியமான தகவல்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளின் கப்பல்களை ஒவ்வொன்றாக அழித்து வந்த இலங்கைக் கடற்படை, புலிகளின் கடைசிக் கப்பலையும் அழிப்பதற்கு இலங்கைக் கடல் எல்லையில் காத்திருந்தது. புலிகளின் கப்பல் சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்ட முயற்சிப்பதாக இலங்கைக்கு அமெரிக்க சி.ஐ.எயால் கொடுக்கப்பட்ட சிக்னல்களை அடுத்து, மேலதிக கடற்படை உதவிகளை திருகோணமலையிலிருந்து கோரியவாறு இலங்கைக் கடற்படை புலிகளின் கப்பலை நெருங்கிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் கப்பலில் இருந்தவர்களை சரணடையுமாறு கடற்படை சமிக்ஞையை வழங்கியது. விடுதலைப் புலிகளின் கப்பலில் இருந்தவர்கள் இந்த சமிக்ஞையை கணக்கில் எடுக்காமல் நகர்வை மேற்கொண்டபோது, இலங்கைக் கடற்படை அக் கப்பல்மீது தாக்குதலை மேற்கொள்ளத் தொடங்கியது. புலிகளின் கப்பலில் இருந்தவர்களும் தங்களது கப்பலில் இருந்த நவீன ஆயுதங்களை எடுத்து கடற்படை மீது பதில் தாக்குதலை மேற்கொள்ளத் தொடங்கினர்.

புலிகளின் கப்பலிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் இலங்கைக் கடற்படைக்குப் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. காரணம் விடுதலைப் புலிகள் தங்களது கப்பலில் வலிமையான ஆயுதங்களை ஃபிற் பண்ணாமல் (பொருத்தாமல்) வந்திருக்கின்றார்கள். தங்களது கப்பல்களை சரக்குக் கப்பல்கள் போன்றே சர்வதேச கடற்பகுதியால் நகர்த்தி வந்தமையால் ஆயுதங்களை அப்படி வெளிப்படையாக கப்பலில் பொருத்தி வரமுடியவில்லை.

இக்கப்பல்களை போர்க்கப்பல்கள் போன்று சர்வதேசக் கடல் எல்லை ஊடாக புலிகளால் நகர்த்தி வர முடியாது. போர்க்கப்பல்களில் ஆயுதங்களை நிலையாக / பிற்பண்ணி தாக்குதல் நடத்துவதற்கும், கைகளில் அந்த ஆயுதங்களை எடுத்து தாக்குதல் நடத்துவதற்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உண்டு. அதாவது பெரிய வகையான ஆயுதங்கள் கடுமையான பின் உதைப்புக்களை கொண்டுள்ளதுடன், துல்லியமான தாக்குதல்களையும் நடத்துவதற்கு பொருத்தமாக அமையாது. ஆனால் நிலையாக கப்பலில் பூட்டினால் துல்லியமாக தாக்குதல்களை நடத்த முடியும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் கடைசிக் கப்பலும், சர்வதேச கடல் எல்லைக்கும், இலங்கைக் கடல் எல்லைக்கும் இடைப்பட்ட பகுதியில் இலங்கைக் கடற்படையால் நீரில் மூழ்கடிக்கப்பட்டது. இருந்த போதும் இக்கப்பலை புலிகள் தாங்களே வெடிக்க வைத்ததாக விடுதலைப் புலிகளின் தலைமைக்கு தெரியப்படுத்தினர். அதாவது பொட்டம்மானின் ஆயுதம் இறக்கும் கடைசி முயற்சியும் தோல்வி கண்டது.

ஒட்டு மொத்தத்தில் விடுதலைப் புலிகளின் போர் முடிவுக்கு வரும் நாளை எதிர் கொண்டிருந்த போது கப்பல்களில் ஆயுதங்களும் வந்து சேராது என்ற நிலைமை உருவாகிப்போனது. புலிகள் தங்களது கடைசி நாட்களுக்காக காத்திருக்க வேண்டிய கால அவகாசத்தை இலங்கைப் படையினர் வழங்காமல் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல்களை தொடர்ச்சியாக நடத்தியவாறு முள்ளிவாய்க்கால் முடிவுகளை ஏற்படுத்துவதற்கு நெருங்கிக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் கடுமையாக மனம் உடைந்திருந்த புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அடுத்த கட்டம் தொடர்பில் முடிவெடுக்க முடியாமல் இருந்த பொழுது போராளிகளும் தளபதிகளும் தலைவரிடம் சென்று சர்வதேச அனுசரணையுடன் சரணடைவதற்குரிய முயற்சிகளை எடுப்போம் என்று கருத்துத் தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த பிரபாகரன், சரணடையும் முயற்சிகளை எடுத்தாலும் இலங்கை அரசாங்கத்தை நம்பமுடியாது. எனக்கு இதில் நம்பிக்கை இல்லை. இருந்தாலும், வேறு மாற்றுவழி இருப்பது போல் தெரியவில்லை. எனவே நடேசனின் தலமையில் நீங்கள் சரணடைவதற்குரிய முயற்சிகளை எடுங்கள் நான் மாற்று வழிகள் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கிறேன் என்று கூறியதுடன் தனது ஆலோசனைகளுக்கும் உதவிகளுக்கும் பொட்டம்மானை நாடாமல் சூசையை மட்டுமே நாடினார்.

இறுதியில் சூசைமீது மட்டுமே பிரபாகரன் நம்பிக்கை வைத்திருந்தார். பொட்டம்மான் சரியாக தனது வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது என்று வருந்திக் கொண்டார். ஏற்கனவே முள்ளிவாய்க்கால் வரை யுத்தம் வருவதற்கு முன்னர் பிரபாகரன் தனது தளபதிகளுக்குத் தெரியாமல் தாக்குதல்களை நடத்திக் காட்டி, எந்த இராணுவ நெருக்குதல்கள் இருந்தாலும் விரும்பிய இடத்தில் நாம் நினைத்தவாறு தாக்குதலை நடத்த முடியும் என்று தனது தளபதிகளுக்கு நிரூபித்துக் காட்டியிருந்தார்.

அதாவது, எல்லாளன் படை நடவடிக்கையை, பிரபாகரன் நேரடியாக தானே நெறிப்படுத்தி நடத்திக் காட்டியிருந்தார். இந்தத் தாக்குதல் திட்டம் தொடர்பில் தாக்குதல் நடைபெறும் வரை பொட்டம்மானுக்கோ, சூசைக்கோ அல்லது வேறு தளபதிகளுக்கோ தெரியாது. அந்த தாக்குதலில் ஈடுபட்ட கரும்புலிகளுக்கும் பிரபாகரனுக்கும் மட்டுமே இந்த தாக்குதல் தொடர்பில் தெரிந்திருந்தது.

அதாவது முக்கியமான அவசரமான கூட்டமொன்று இடம்பெறப்போகின்றது எனவே விசுவமடுவுக்கு வாருங்கள் எனப் பொட்டம்மான், நடேசன், கஸ்ரோ, சூசை, தீபன், விதுசா உட்பட முக்கிய தளபதிகளை, அதாவது கேணல் நிலையில் உள்ள அனைத்து தளபதிகளையும், அழைத்த பிரபாகரன் அனைவருக்கும் ஃபிரைட்றைஸ் கொடுத்துவிட்டு அவர்கள் சுவாரசியமாக உணவருந்திக்கொண்டிருந்த போது, உங்களுக்கு இன்றைய கூட்டம் நான் நடத்தவில்லை, நானும் உங்களுடன் இருந்து பார்க்கப்போகின்றேன், இப்பொழுது எல்லாளனை உங்களுக்குக் காட்டப் போகின்றேன் என்று கூறியவாறு எல்லாளன் படை நடவடிக்கையை ஸ்கைப் ஊடாக பிரபாகரன் தளபதிகளுக்கு காட்டினார்.

அந்த இரவு வேளையிலும் புலிகளின் தளபதிகளின் கண்களில் ஆச்சரியம், அதிர்ச்சி என்பன தென்பட்டது. பொட்டம்மானுக்கே தெரியாமல் தலைவர் கரும்புலித் தாக்குதலை துல்லியமாக நெறிப்படுத்திக் கொண்டிருக்கின்றார் என்பதே அந்த தகவலாகும். பொட்டம்மானுக்கே கடும் அதிர்ச்சியாக இருந்தது. தலைவர் தனக்குத் தெரியாமல் இந்தத் தாக்குதலை நெறிப்படுத்தியதானது தனது பலவீனத்தாலாக இருக்குமோ என எண்ணிக் கொண்டார். இருந்த போதும் தலைவர் தன்னை உற்சாகப்படுத்துவதற்கும் தனக்கு மறைமுகமாக ஒரு செய்தியைச் சொல்லுவதற்கும் இத்தாக்குதலை தனக்குத் தெரியப்படுத்தாமல் இருந்திருக்கின்றார் என பின்னால் அறிந்து கொண்டார். அதுவே உண்மையும் ஆகும்.

அதாவது கொழும்பில்-தென் பகுதிகளில் தாக்குதல்களைத் தொடர்ந்தும் நடத்துங்கள் என்பதே தலைவரின் மறைமுகமான செய்தியாகும். போரியல் வரலாற்றில் பிரபாகரனுடைய போர் உத்திகள் சிறப்பாக பேசப்பட்டவை. மிகச் சிறிய ஆயுதக் குழுவாக ஆரம்பத்தில் உருவாகிய விடுதலைப் புலிகள் அமைப்பு பின்னாளில் உலக அரசுகள் பலவும் கவனத்துக்குரியதாகக் கொண்ட ஒரு அமைப்பாக மாறியது. பிரபாகரன் தனது போராட்டத்தில் பலவிதமான யுத்திகளைக் கையாண்டிருக்கிறார். அதனொரு கட்டமாகவே போரின் இறுதி நாட்களைத் திசை திருப்பும் ஒரு இராணுவ நடவடிக்கையாக எல்லாளன் படையின் நடவடிக்கை அமைந்திருந்தது.

பிரபாகரன் தானே நின்று நெறிப்படுத்திய படையணி அது. இப்படையணியின் அனுராதபுர விமானப் படைத்தளத் தாக்குதல் பிரசித்தி பெற்றிருந்த ஒன்றாகும். அரசாங்கத்துக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்திய தாக்குதல் இதுதான்.

பிரபாகரனின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் ஏன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட வேண்டும்? அதற்கான காரணம் என்ன? பொட்டு அம்மான், சூசை, ரமேஸ், சசிமாஸ்டர் உள்ளிட்ட முக்கிய தளபதிகளின் பிழையான நடவடிக்கைகள் காரணமாகவே பிரபாகரனால் இத்தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டது. ஏனென்றால் விடுதலைப் புலிகளால் நடத்தப்படுகின்ற தாக்குதல்களுக்கான திட்டங்களை வகுக்கும் பொறுப்பையும், நடத்தும் பொறுப்பையும் துறைசார் தளபதிகளிடம் கையளிக்கும் போது அவ்வொவ்வொரு தாக்குதல்கள் குறித்த செய்திகளையும் தளபதிகள் இராணுவத்திற்கு வழங்குவதிலும் தமது உயிரை காப்பாற்றிக் கொள்வதிலுமே பின்னாட்களில் கவனமாக இருந்து வந்தனர். இதனால் பிரபாகரனால் திட்டமிடப்பட்டு தளபதிகளிடம் கொடுக்கப்பட்ட தாக்குதல்கள் பல தோல்வியில் முடிவடைந்தன.

இவ்வாறு தொடர்ந்த பல நிகழ்வுகள் பற்றி தமிழ் ஊடகங்கள் அறிந்து கொண்டனவா? அல்லது அறிந்தும் அறியாதது போன்று நடந்து கொண்டனவா? என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# இலங்கையில் அபிவிருத்தி வெற்றிகரமாக முன்னெடுப்பு

## ஆசிய அபிவிருத்தி வங்கி பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் புதிய துணைத் தலைவர் வெங்கல் ஷேங்கிற்கும் இடையிலான சந்திப்பு பொருளாதார் அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கி துறைத் தலைவர் அங்கு கருத்து வெளியிடுகையில், குறுகிய காலத்தில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் பாராட்டத்தக்கவை.

உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, கிராமிய மற்றும் நகர திட்டமிடல், வேலையின்மை வீழ்ச்சி, புதிய தொழில்வாய்ப்புக்கள், போக்குவரத்து மற்றும் வீதிகளின் அபிவிருத்தி சுகாதாரம் உட்படப் பல்வேறு துறைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு வழங்கிய நிதி வசதிகள் ஊடாக உரிய பயன் எட்டப்பட்டுள்ளது.

இளைஞர், படையினருக்கு தொழிற் பயிற்சி வழங்குவதன் ஊடாக உரிய முகாமைத்துவத்தை அரசாங்கம் வழங்கியுள்ளது. இலங்கைககு தொடர்ந்தும் ஆதரவு வழங்கப்படும் என்றார்.

# தொழில் மோசடிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கொழும்பு)



அரசியல்வாதிகளின் பெயர்களை உபயோகித்து முன்னெடுக்கப்படுகின்ற தொழில் மோசடியை உடனடியாக நிறுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண தெரிவித்துள்ளார்.

நேற்றமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பெயர்களை உபயோகித்து, சட்டவிரோத குழுவொன்று இந்த மோசடி யில் ஈடுபட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு பின்புலத்தில் அரசியல்வாதிகள் இருப்பார்களாயின், அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மக்களின் பணத்தை சூறையாடுகின்றவர்களை சட்டத்திற்கு முன்பாகக் கொண்டு வந்து, அவர்களது தலைவர்களையும் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அப்படியில்லை என்றால், அந்த நடவடிக்கைகளில் தலையீடு செய்ய நாம் தயாராகவுள்ளோம் என்றார்.

# வைப்புப் பணத்தை வழங்கக் கோரி நிதி நிறுவனத்தின் முன் உண்ணாவிரதம்




(கொழும்பு)

வைப்பு பணத்தை மீளப் பெற்றுத் தருமாறு கோரி சென்ரல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு முன்னால் பணதத்தை வைப்புச் செய்தவர்கள் நேற்று உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நிறுவனம் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் வைப்பு பணத்தையோ அல்லது அதற்கான வட்டியையோ இது வரையிலும் வழங்கவில்லை என போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு முதல் தாம் எதிர்நோக்கியுள்ள நிலைமை தொடர்பில் குறித்த அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்த பணத்தை வைப்புச் செய்தவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இருப்பினும், எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படாத நிலையிலேயே இவர்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நிறுவனம் தொடர்பில் வைப்பாளர்கள் நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுத்துள்ளமையால் தமக்கு எவ்விதமான நடவடிக்கையும் தற்போது எடுக்க முடியாது என இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பீ.டீ.டப்ளியூ. ஆனந்த சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனத்தை மீண்டும் கட்டியெழுப்புவற்தகாக மத்திய வங்கி முன்னெடுத்த நடவடிக்கை இதன் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துளளார்.

# அரசாங்கத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்

(கொழும்பு)


அரசாங்கத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுப்படவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பு ஹைட்பார்திடலில் இடம்பெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள், கசினோ மற்றும் மக்களின் வாழ்வாதார சுமை என்பவற்றை வலியுறுத்தி இந்த ஆரப்பாட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான சட்ட திட்டங்கள் குறித்த சட்டமூலத்தை, மீண்டும் திருத்தியமைக்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு ஐக்கிய தேசிய கட்சி எதிர்க்கின்றது.

கடந்த வருட உள்ளூராட்சி சபைகளின் வரவு-செலவுத்



திட்டங்கள் தோல்வியடைந்ததன் காரணமாக குறித்த சட்டமூலத்தை திருத்தி அமைக்க அரசாங்கம் தயாராகி வருகின்றது.

இதற்குரிய அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் அண்மையில் திருத்தப்பட்டது. அரசாங்கத்தில் உள்ளவர்கள் கூட வரவு செலவுத்திட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அரசாங்கம் உள்ளக தோல்வியை மறைத்துக் கொள்வதற்காகவே, அரசாங்கம் இந்த திருத்தத்தை மேற்கொண்டுள்ளது என்றார்.

# ஆயுர்வேத சிகிச்சை நிலையம் முற்றுகை

(கொழும்பு)

மகரகமவில் ஆயுர்வேத சிகிச்சை நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்த விபசார விடுதி பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இம்முற்றுகையின்போது, குறித்த நிலையத்தை நிர்வகித்ததாகக் கூறப்படும் பெண்ணொருவரும் ஆணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இத்தொழிலில் ஈடுபட்டதாக கூறப்படும் 5 பெண்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்கள் பாதுக்க, இரத்மலான, அவிசாவளை மற்றும் மொரட்டுமுல்ல பகுதிகளைச் சேர்ந்தவர்களென தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


# கட்சியை ஒன்றிணைக்கும் இயலுமை ஐ.தே.க. தலைமைத்துவ சபைக்கு இல்லை

## தென் மாகாணசபை முன்னாள் உறுப்பினர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை ஒன்றிணைக்கும் இயலுமை தலைமைத்துவ சபைக்கு இல்லை என தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி மைத்திரி குணரத்ன தெரிவித்துள்ளார்.

தனக்கு வேட்புமனு வழங்கபபடாமை மூலம் இந்த விடயம் மேலும் உறுதிப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்த மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைகளில் கலந்துகொள்வதற்கு நேற்றுமுன்தினம் வருகை தந்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறிகொத்த கட்சி தலைமையகம் மீதான தாக்குதல் தொடர்பான வழக்கு இன்று நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்ட மாஅதிபரின் அறிக்கை கிடைக்காமையினால், வழக்கு விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

# மேற்குலகின் சவாலுக்கு முகம்கொடுக்கும் அரசாங்கத்தை வரவேற்கின்றோம்

## எதிர்க்கட்சி பிரதேச கொறடா

(கொழும்பு)

யுத்த வெற்றியை நாம் ஒருபோதும் எதிர்த்ததில்லை . பயங்கரவாதத்தை ஒழித்ததை வரவேற்கின்றோம் .மேற்குலக நாடுகளின் அழுத்தங்களுக்கு அரசாங்கம் அச்சமின்றி முகம் கொடுப்பது வரவேற்புக்குரியதாகும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசுடன் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் அதற்காக நாட்டைக் காட்டிக்கொடுக்க மாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்

சர்வதேச நாடுகள் எமது நாட்டுக்கு எதிராக செயற்படும் போது அச்சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான ஒத்துழைப்பை வழங்குவோம். இது ஒவ்வொரு நாட்டினது எதிர்க்கட்சியினதும் கடப்பாடாகும்.

நாட்டுக்கு சர்வதேச ரீதியாக எதிர்ப்புகள் வரும்போது ஆளும கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதங்களுக்கு அப்பால் சிந்திக்க வேண்டும் . அதன்போது நாட்டின் பாதுகாப்பே முதலிடத்தில் இருக்கும். எனவே, நாட்டுக்காக முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம்.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு மாநாட்டில் பதிலளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும். அதில் தலையிடுவதற்கு எமக்கு அதிகாரம் இல்லை.

# உலகத்தை அழிப்பேன்; கூறியவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

தானே கதிர்காமக் கந்தன் எனவும் முழு உலகத்தையும் அழிக்கும் சக்தி தன்னிடம் இருப்பதாகவும் கூறி கதிர்காமத்திலுள்ள வள்ளியம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள புளியமரத்தில் ஏறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட எம்.ஜி.ஏ ரோஹித்தவை 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திஸ்ஸமாராகம நீதவான் இந்திக ருவான் த சில்வா உத்தரவிட்டுள்ளார்.

வெள்ளைத்துணிகளில் கறுப்பு மையினால் எழுதப்பட்ட சில வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மரத்தில் கட்டிக் தொங்க வைத்து விட்டே அவர் மரத்திலேறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்.

ஜனாதிபதியை சந்திக்கும் வரை மரத்தில் இருந்து இறங்க போவதில்லை என்றும் தெரிவித்தார். சம்பவ இடத்திற்குச் சென்ற கதிர்காமம் பொலிஸ் அந்த இளைஞனை மரத்திலிருந்து இறக்கி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# பிரதேச அபிவிருத்திமேம்பாடடைய சமூகம் நோக்கிய செயற்பாடு அவசியம்

## கல்வி அமைச்சின் செயலாளர்



(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசங்கள் முன்னேற்றமடைய வேண்டுமாயின் கல்விக்கூடாக சமூகம் நோக்கிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதற்காக பாடசாலைகள், சமூக மட்ட அமைப்புக்கள், கிராம மட்ட அமைப்புக்கள் ஒருங்கிணைந்த செயற்பாட்டை ஆரம்பிக்க வேணடும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

கரவெட்டி பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் கரவையூர் ந.மயூரரூபனின் செறகுறியம் மற்றும் த.அஜந்தகுமாரின் படைப்பின் கதவுகள் போன்ற இரு நூல்கள் வெளியீட்டு விழா அண்மையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் கலாசாரப் பேரவைத்தலைவரும் கரவெட்டி பிரதேச செயலருமான எஸ்.சிவசிறி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்ந்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று எமது சமூகத்துக்கு தேவையான செயற்பாடுகளை அறிந்து அடித்தளத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கையாக மனமாற்ற நிலைமைகளைக் கொண்டு வரவேண்டும்.

சிறுவயதிலிருந்து பாடசாலை ஊடாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாங்கள் உயர்ந்த கலாசாரத்தையும் சமூக விழுமியங்களையும் கொண்ட ஒரு மக்களாக இருக்கிறோம். எங்களது நாட்டையும் எமது பிரதேசத்தையும் முன்னேற்றுவதற்கு சமூகம் நோக்கிய செயற்பாடு அவசியமானது.

இதில் கலைஞர்களதும் எழுததாளர்களதும் முக்கிய பங்கு இருக்கவேண்டும். இவர்கள் சமூகத்துக்கு கிடைக்கக்கூடிய நல்ல விடயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு வடமாகாண கலாசார அமைப்புகள் ஒத்துழைப்பு வழங்கவுள்ளன.

கடந்த காலத்தில் எமது எழுத்தாளர்கள் தமது படைப்புக்களை சந்தைப்படுத்துவதில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தது. ஆனாலும் இன்று அதுமாறி 2013ஆம் ஆண்டு ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் கலாசார அபிவிருத்திக்கான ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டிருந்த போதிலும் 2014ஆம் ஆண்டு அது 5 மடங்காக அதி கரித்து ஒவ்வொரு பிரதேசத்திற்கும் 5 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியைக் கொண்டு மென்மேலும் எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் உருவாக்கி அவர்களினது வளர்ச்சிக்கு களம் அமைத்துக் கொடுக்க பிரதேச செயலர்கள் அந்தந்த பிரதேச மக்களும் ஒருமித்து செயலாற்ற வேண்டும் அதுவே எமது சமூக கலாசார பிறழ்வுகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமையும் என்றார். (116)

# குடியரசு தினம்

இந்திய மக்கள் குடியரசின் 64ஆவது நினைவுதினம் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு கிறீன் கிராஸ் ஹோட்டல் நடைபெறவுள்ளது.

யாழ்.இந்திய உதவி தூதுவர் வி.மகாலிங்கம். திருமதி. நித்தியா மகாலிங்கம் தலைமையில் வரவேற்பு நிகழ்வு இடம் பெறவுள்ளன.

அன்றைய தினம் இந்திய கலைஞர்களின் கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (105)

# நீண்டகாலமாக இயங்காதுள்ள வளலாய் நெசவுசாலை

வளலாய் பிரதேசத்தில் அமைந்துள்ள நெசவுசாலையானது கடந்த பல வருடங்களாக இயங்காநிலையில் சேதமடைந்து காணப்படுவதாக அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நெசவுசாலையானது முன்னர் இயங்கி வந்த நிலையில் பலர் இங்கு நெசவுப்பயிற்சியில் ஈடுபட்டும் வந்துள்ளனர். எனினும் கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தம் காரணமாக இது செயற்படா நிலையில் உள்ளது.

இதன் சுற்றுப்புறச் சூழல் சுகாதாரமற்ற நிலையில் பல்வேறு கழிவுப்பொருட்களுடன் காணப்படுவதாகத் தெரிவிக்கும் அப்பிரதேச மக்கள் இதனால் பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே மேற்படி நெசவுசாலையினை புனரமைத்து மீள் இயங்க வைத்தால் அப்பிரதேச இளைஞர், யுவதிகள் பெரிதும் நன்மையடைவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே நெசவுசாலையினை நேரடியாக சென்று பார்வையிட்டு அதனை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டும் என அப்பிரதேச பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# வீதிகளில் தேங்கும் குப்பை சுகாதாரத்திற்கு பங்கம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையினால் நகர்ப் பகுதியில் குப்பை அகற்றும் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை எனவும் இதனால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கதிரவேற்பிள்ளை வீதி, தம்பாவத்தை சந்தியின் இருமருங்கிலும் குப்பைகள் நிறைந்து காணப்படுவதால் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரத்திற்கும் பங்கம் ஏற்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதைவிட வீதியில் காணப்படும் குப்பைகளை கால் நடைகளும் பறவைகளும் கிளறிச் செல்வதால் குப்பைகள் வீதியில் காணப்படுவதுடன் பொலித்தின் பைகளும் காற்றுக்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது இப்பகுதியில் கொட்டப்படும் கழிவுகளை உரிய வகையில் அகற்ற பருத்தித்துறை நகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (109)



# அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ்; அரையிறுதியில் லீனா



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு சீனாவின் லீனா முன்னேறியுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில், நான்காம் நிலை வீராங்கனை சீனாவின் லீனா, 29ஆவது இடத்தில் உள்ள இத்தாலியின் பிளாவியா பெனிடாவை எதிர்கொண்டார். இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய லீனா, முதல் செட்டை 6-2 என வென்றார். தொடர்ந்து இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய லீனா, 6-2 என சுலபமாக தன்வசப்படுத்தினார். முடிவில், லீனா 6-2, 6-2 என்ற நேர்செட்களில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் முதல் நிலை வீரர் ரபெல் நடால் (ஸ்பெயின்) 7-6 (7-3), 7-5, 7-6 (7-3) என்ற நேர்செட்டில் ஜப்பான் வீரர் நிஷிகோரியை தோற்கடித்து காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். மற்றொரு ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் 6-3, 7-5, 6-4 என்ற நேர்செட்டில் சோங்காவை (பிரான்ஸ்) சாய்த்து கால் இறுதிக்குள் நுழைந்தார்.

## இன்று இரண்டாவது ஒரு நாள்

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்றைய தினம் நியூசிலாந்தின் ஹமில்டனில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே, நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி 24 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் முன்னிலையிலுள்ளது.

## பாகிஸ்தான் எதிர்ப்பு

இந்திய, அவுஸ்ரேலிய மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபைகளின் விருப்பப்படி நிதி பங்கீடுகளில் புதிய விதிமுறையை அமுல்படுத்தும் ஐ.சி.சி.யின் செயற்றிட்டத்துக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபைக்கு கிடைக்கும் வருமானம் ஆண்டுதோறும் அதன் உறுப்பு சபைகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும். தாங்கள் அதிகளவு வருமானம் ஈட்டித் தருவதால் தங்களுக்கான நிதி பங்கீட்டையும் அதிகரிக்க வேண்டும் என இந்தியா, அவுஸ்ரேலியா, மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபைகள் ஐ.சி.சி.யிடம் கோரிக்கை விடுத்தன.

இதுகுறித்து ஆலோசனை நடாத்தியபின், ஐ.சி.சி.யின் நிதி மற்றும் வர்த்தக விவகாரக் குழு புதிய விதிமுறைகளை வகுத்துள்ளது.

இதற்கான செயற்றிட்டம் ஜனவரி 28, 29ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.சி.சி.யின் செயற் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்படும். இந்த செயற றிட்டத்தில் இந்திய, அவுஸ்ரேலிய, இங்கிலாந்து கிரிக்கெட் சபைகளின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

செயற்குழுக் கூட்டத்தில் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்ய முடிவுசெய்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, இலங்கை, நியூசிலாந்து உள்ளிட்ட கிரிக்கெட் சபைகளிடம் ஆதரவு கோரி வருகிறது. ஆனால்,நியூசிலாந்து கிரிக்கெட் சபை ஐ.சி.சி.யின் செயற்றிட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்க முடிவு செய்துள்ளது.

## பங்களாதேஷ் அணி அறிவிப்பு

(டாக்கா)

இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் போட்டித் தொடருக்கான பங்களாதேஷ் அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், முதலாவது போட்டிக்கான குழாமையே பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

எம். ரஹீம் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் குழாமில் 14 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் ஷம்சுர் ரஹ்மான் இதுவரை டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றாத வீரராக உள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: எம். ரஹீம், மெகமதுல்லா, அப்துர் ரசாக், அல் அமின் ஹொசைன், மார்ஷல் அயுப், மாமினுல் ஹக், நசீர் உசைன், றொபியுல் இஸ்லாம், றூபெல் ஹொசைன், ஷகிப் அல் ஹசன், சொஹக் கஷி, தமிம் இக்பால், ஷம்சுர் ரஹ்மான், இம்ருல் கைஸ்.

## உலகக் கிண்ண ருவெண்ரி–20 இலங்கையின் உத்தேச குழாம்

(கொழும்பு)

உலகக் கிண்ண ருவெண்ரி-20 தொடருக்கான 30 பேர் கொண்ட இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் 16 ஆம் திகதி பங்களாதேஷில் நடைபெறவுள்ளஉலகக் கிண்ண ருவெண்ரி-20 தொடருக்கான 30 பேர் கொண்ட இலங்கை குழாம் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

.அறிவிக்கப்பட்டுள்ள குழாமில்,அண்மையில் இலங்கை சார்பாக ருவெண்ரி-20 போட்டிகளில் பங்குபற்றிய வீரர்கள் அனைவரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தவிர உபுல் தரங்க, தம்மிக்க பிரசாத், ஜீவன் மென்டிஸ், இசுரு உதான போன்ற வீரர்கள் சிறிய இடைவேளைக்குப் பின்னர் தேசிய அணிக் கான பரிசீலனைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: டினேஷ் சண்டிமால், டில்சான், குசால் ஜனித் பெரேரா, மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார, அஞ்சலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன, உபுல் தரங்க, அஷன் பிரியஞ்சன், கித்துருவன் விதானகே, அஞ்சலோ பெரேரா, லசித் மலிங்க, நுவான் குலசேகர, திஸர பெரேரா, சுரங்க லக்மல், ஷமின்ட எரங்க, தம்மிக்க பிரசாத், நுவான் பிரதீப், டில்ஹார லொக்குஹெட்டிகே, சச்சித்திர சேனநாயக்க, ரங்கன ஹேரத், அஜந்த மென்டிஸ், டில்ருவான் பெரேரா, சீக்குகே பிரசன்ன, ஜீவன் மென்டிஸ், றமித் றம்புக்வெல்ல, சத்துரங்க டி சில்வா, மிலிந்த சிரிவர்தன, கோசல குலசேகர, இசுரு உதான.

## முன்னணி வீரர்களின் சொதப்பலால் தோல்வி



(சார்ஜா)

பாகிஸ்தான் அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் முன்னணி வீரர்கள் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தியதே தோல்விக்கு அடிப்படையாக அமைந்தது என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட இறுதிப் போட்டி நேற்று முன்தினம் சார்ஜாவில் நிறைவுபெற்றது. இதில் பாகிஸ்தான் அணி ஐந்து விக்கெட்டுக்களால் போராடி வென்றதுடன் தொடரை சமன் செய்தது.

இப்போட்டியில் தோல்வியடைந்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடரில் நாங்கள் முன்னிலை பெற்றிருந்ததால், ஓட்டங்களைப் பெறுவதையும், விக்கெட்டுக்களை இழப்பதையும் தவிர்த்து, தற்காப்பு ஆட்டத்தையே வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், நாங்கள் அதை செய்யவில்லை.

போட்டியின் இறுதிநாள் சுழற்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக இருக்கவில்லை. அழுத்தத்திற்கு மத்தியில் பிரசன்ன ஜயவர்தன சிறப்பாக ஆடினார். இரண்டாவது இனிங்ஸில் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடியிருந்திருந்தால் தோல்வியைத் தவிர்த்திருக்கலாம். அத்துடன் தொடரையும் வென்றிருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.



## போபாரா ஆதரவு

(சிட்னி)

இங்கிலாந்து அணியின் தலைவராக குக் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என அணியின் சகலதுறை வீரர் ரவி போபாரா தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் தொடரையும், சர்வதேச ஒருநாள் தொடரையும் அவுஸ்ரேலிய அணியிடம் இழந்ததை அடுத்து சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கான அணியின் தலைவர் பதவியில் இருந்து தாம் விலகலாம் என குக் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அணியின் தலைவராக அவர் தொடர்ந்தும் நீடிக்கப்படவேண்டும் என போபாரா தெரிவித்துள்ளார்.

குக் சிறந்த வீரர். ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணியின் தலைவராக அவர் தொடர்ந்தும் செயற்பட வேண்டும்.ஓரிரு தொடரை வைத்துக் கொண்டு இவ்வாறான முடிவுகளை எடுப்பது அணிக்குப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மலிங்க, மெண்டிஸ் திருப்பி அழைப்பு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவின் உள்ளூர் ருவெண்ரி-20 தொடரான பிக்போஷ் லீக் தொடரில் பங்குபற்றிவந்த இலங்கை அணியின் பந்து வீச்சாளர்களான லசித் மலிங்க, அஜந்த மெண்டிஸ் இருவரையும் இலங்கை கிரிக்கெட் சபை திருப்பி அழைத்துள்ளது.

லசித் மலிங்க மெல்பேர்ன் ஸ்ரார்ஸ் அணி சார்பாகவும், அஜந்த மெண்டிஸ் சிட்னி தண்டர்ஸ் அணி சார்பாகவும் பிக்போஷ் லீக் போட்டிகளில் பங்குபற்றி வந்தனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க, தேசிய அணிக்கான குழாமிலுள்ள அனைத்து வீரர்களும் கடுமையான பயிற்சிகளில் அடுத்த சில வாரங்களுக்கு உட்பட வேண்டுமென உணர்ந்ததாகவும் அதன் காரணமாகவே இருவரையும் திருப்பி அழைத்ததாகவும் தெரிவித்தார்.

அஜந்த மெண்டிஸ், லசித் மலிங்க இருவரையும் திருப்பி அழைக்கும் முடிவும் பயிற்றுவிப்பாளர்களினதும் தேசிய தேர்வாளர்களினதும் கருத்துக்களைக் கருத்திற்கொண்டு எடுக்கப்பட்டதாகவும் நிஷாந்த ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

லசித் மலிங்கவிற்கு பாரதூரமான உடல் தகுதிப் பிரச்சினைகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்த இலங்கையின் பிரதம தேர்வாளர் சனத் ஜெயசூரிய, ஆனால் உண்மையான ஆர்வத்தை வெளிப்படுத்தி கடினமான உழைப்பை மேற்கொள்ள லசித் மலிங்க தயாராக இருந்தால், இலங்கைக்காக தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தத் தயாராக இருந்தால் அவர் இலங்கை அணிக்காகத் தெரிவு செய்யப்படுவார் எனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே, இலங்கை அணியின் சகலதுறை வீரர் திஸர பெரேரா பிக்போஷ் லீக் தொடரில் பங்குபற்ற அனுமதி மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜோன்சனுக்கு விருது

(சிட்னி)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை சார்பில் ஆண்டுதோறும் மிகவும் சிறந்த கிரிக்கெட் வீரருக்கு அலன்போடர் விருது வழங்கப்பட்டு வருகிறது. வீரர்கள் நடுவர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் வாக்குகள் மூலம் இந்த விருதுக்கான வீரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

இந்த ஆண்டுக்கான சிறந்த வீரருக்கான அலன் போடர் விருதை 168 வாக்குகள் பெற்ற வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் தட்டிச் சென்றுள்ளார்.

மைக்கல் கிளார்க் (156 வாக்குகள்), ஜேம்ஸ் போல்க்னர் (121 வாக்குகள்) ஆகியோரை பின்னுக்குத் தள்ளி ஜோன்சன் விருதைக் கைப்பற்றினார். சிறந்த டெஸ்ட் வீரர் விருதுக்கு மைக்கல் கிளார்க்கும், சிறந்த ஒருநாள் போட்டி வீரர் விருதுக்கு ஜோர்ஜ் பெய்லியும் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த விருதை வென்றது மகிழ்ச்சி அளிக்கின்றது. மேலும் சாதிக்க வேண்டும் என்ற உத்வேகத்தைத் தருகின்றது என விருது வென்ற ஜோன்சன் தெரிவித்தார்.



# ஜொனியன்ஸ்களின் போர் யாழ். சென். ஜோண்ஸ் மூன்றாமிடம்



(யாழ்ப்பாணம்)

ஜொனியன்ஸ்களின் போர் என அழைக்கப்படும் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இலங்கையில் உள்ள நான்கு சென். ஜோண்ஸ் கல்லூரி அணிகளுக்குமிடையில் நுகேகொட சென். ஜோண்ஸ் கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஜொனியன்ஸ்களின் போர் என அழைக்கப்படும் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் கடந்த 18,19ஆம் திகதிகளில் கொழும்பு பி.ஆர்.சி. விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். சென். ஜோண்ஸ், தெமட்டகொட சென். ஜோண்ஸ், பாணந்துறை சென். ஜோண்ஸ், நுகேகொட சென். ஜோண்ஸ் கல்லூரி அணிகள் மோதின.

யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணி குழுப் போட்டியில் நுகேகொட சென். ஜோண்ஸ் கல்லூரியை எதிர் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நுகேகொட சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. இசுறு ரங்கஜீவ 19, பவந்தா மனிஷா 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர் நான்கு, கானாமிர்தன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கானாமிர்தன் 20, பிரிசங்கர் 34, நிலோஜன் ஆட்டமிழக்காது 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பலிகடவன், மொகமட் சஹீர், சங்கலப ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டி சமநிலையில் நிறைவுற்றதால் சூப்பர் ஓவர் முறை பயன்படுத்தப்பட்டது. இதில் முதலில் ஆடிய யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணி ஒரு ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 5 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆறு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய நுகேகொட சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 0.2 பந்துகளில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும், தெமட்டகொட சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தெமட்டகொட சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில்ஆடிய யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கபில்ராஜ் 32, பிரிசங்கர் 55, அனோஜன் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் உஸ்மா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 183 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தெமட்டகொட சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களைஇழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஞ்சய 35, மொகமட் இன்சாப் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் துவாரகசீலன் நான்கு, கானாமிர்தன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் நுகேகொட சென்.ஜோண்ஸ் கல்லூரி அணியை வீழ்த்தி பாணந்துறை சென். ஜோண்ஸ் கல்லூரி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணி வீரர் பிரிசங்கர் மற்றும்,சிறந்த களத்தடுப்பாளராக யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரியின் விக்கெட் காப்பாளர் கபில்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எஸ்.பி.,48)

# வடமாகாண அணிகளுக்கிடையிலான கரப்பந்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

இலங்கை கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட தேசத்தின் மகுடம் கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை இரண்டாவது ஆண்டாக ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றிக் கொண்டது.

வடக்கு மாகாண கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட தேசத்தின் மகுடம் கரப்பந்தாட்டத் தொடர் நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்குகொண்டன. இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மன்னார் சென். மேரிஸ் அணியும் மோதின. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும், மன்னார் தோமஸ் அணியும் மோதின. இதில் மன்னார் தோமஸ் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், மன்னார் தோமஸ் அணியும் மோதின. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டியிலும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.93)



## பிரதேச செயலக மட்ட கால்பந்து நெடுந்தீவு உதயசூரியன் சம்பியன்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டித் தொடரின் சம்பியன் பட்டத்தை உதயசூரியன் அணி கைப்பற்றிக் கொண்டது.

நெடுந்தீவுப் பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் நெடுந்தீவு அன்ரனி யுத் அணியும், உதயசூரியன் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய உதயசூரியன் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஐக்கிய தீபம் அணியும், சென். ஜோண்ஸ் அணியும் மோதின. இதில் ஐக்கிய தீபம் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் உதய சூரியன் அணியும், ஐக்கிய தீபம் அணியும் மோதின. இதில் உதயசூரியன் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)



## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர்களின் விளையாட்டுத்திறனை ஊக்குவிப்பதற்காக அக்கல்லூரியின் பழைய மாணவரும், சென்.ஜோண்ஸ் கல்லூரி ஆசிரியருமான வி.குமணனினால் விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிரிக்கெட், கால்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களுக்கான ரூபா 10 ஆயிரம் பெறுமதியுடைய உபகரணங்கள் இதன்போது கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ். மாவட்ட இளைஞர் அணி வெற்றி

களுத்துறை மாவட்ட இளைஞர் அணிக்கெதிரான போட்டியில் யாழ். மாவட்ட இள்ளஞர் அணி வெற்றிபெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் பரிமாற்றுத்திட்டத்திற்காக களுத்துறைக்கு சென்ற யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளன அணிக்கும் களுத்துறை மாவட்ட இளைஞர் அணிக்குமிடையிலான நட்புறவு ரீதியான கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் யட்டகல பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் யாழ். மாவட்ட அணி 2 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.நாணயற்சுழற்சிவெற்றி பெற்று முதலில் ஆடிய களுத்துறை மாவட்ட இளைஞர் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் 41 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் கவிந்து 11, பெரேரா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் விஜிதரன் மூன்று, பென் ஜோய் இரு விக்கெட்க்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு 42 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி களமிறங்கிய யாழ். மாவட்ட இளைஞர்கழக சம்மேளனஅணி இறுதி ஓவரில் 42 ஓட்டங்களைப் பெற்று போட்டியில் வெற்றி பெற்றது. இதில் விஜிதரன் 20, ரேகன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கவிந்து 3 விக்கெட்களை வீழ்த்தினார். போட்டியின் சிறப்பாட்டக்காராக யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளன அணியின் விஜிதரன் தெரிவானார். (48)



# அழகிரியின் அரசியல் அஸ்தமனம்

- ஞாநி கட்டுரையிலிருந்து.

திராவிட முன்னேற்றக் கழகத்தை சுமார் 20 ஆண்டுகளாகப் பலவீனப்படுத்திக் கொண்டிருக்கும் பல நோய்களில் ஒன்றான சகோதர யுத்தம் முடிவுக்கு வருகிறது. வாலி மீது ராமன் மறைந்திருந்து அம்பு எய்து சுக்ரீவனுக்கு உதவியதுபோல அல்லாமல் ஸ்டாலினுக்கு உதவியாக கருணாநிதி நேரடியாகவே அம்பை அழகிரி மீது எய்ய பயணத்தையே தடம்புரளச் செய்தன. அதே போன்ற இன்னொரு தப்பைத்தான் அழகிரி விஷயத்திலும் அவர் செய்தார்.

சென்னையில் அழகிரியைச் சமாளிக்க முடியாமல் சிங்கப்பூருக்கு அனுப்பினார். பின்னர் திரும்பி வந்தவரை மதுரையில் முரசொலி பதிப்புக்குப் பொறுப்பாளராக அனுப்பினார். சில ஆண்டுகளில் அந்தப் பதிப்பே மூடப்பட்டுவிட்டது. ஆனால் அழகிரி மதுரையில் தி.மு.க. பிரமுகராக நிலை பெற்றுவிட்டார். அழகிரிக்காகக் கட்சியின் மூத்த உறுப்பினர்களை அங்கே கருணாநிதி ஓரங்கட்டவேண்டிவந்தது. அரசியல்ரீதியாக கருணாநிதிக்கு றன. ஒரு கணவனாக ஒரு தந்தையாக இந்தக் குரலுக்குச் செவிசாய்த்ததன் விளைவாகக் கட்சிக்குத் தேவையற்ற கட்சியைப் பலவீனப்படுத்திய ஒரு சகோதர யுத்தத்துக்கு கருணாநிதி தொடர்ந்து வித்திட்டு வளர்த்துவந்திருக்கிறார். இதை ஊக்குவித்ததன் அடுத்த விளைவாக அரசியலுக்கு வருவதில் ஆர்வமில்லாமல் அவருடைய இலக்கிய வாரிசாக மட்டுமே உருவாகிவந்த மகளையும் இதற்குள் சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

கருணாநிதியின் குடும்ப வாரிசுகளால் தி.மு.க-வுக்கு ஏற்பட்ட லாபத்தை விட இழப்புகளே அதிகம். கனிமொழி மீது குற்றம்சாட்டப்பட்டுள்ள ஸ்பெக்ட்ரம் ஊழல்தான் சென்ற தேர்தலில் தி.மு.க-வைச் சரிவை நோக்கித் தள்ளியது. தயாநிதி மாறன் - கலாநிதி மாறன் குடும்பத்துடன் நடந்த சன் டி.வி. பங்குச் சண்டை டெல்லி மன்மோகன் அரசின் மந்திரி சபை உருவாக்கம் வரை நீரா ராடியா டேப்களில் எதிரொலித்தது. முறைகேடாக டெலிபோன் எக்சேஞ்ச் நடத்திய வழக்கு இப்போது சி.பி.ஐ. வசம். அழகிரியின் ஆதரவு சக்திகள் எல்லாம் கிரனைட் முதல் நிலப்பறிப்பு வழக்கு வரை சிக்கியிருக்கிறார்கள். வேறு எந்த மத்திய கபினட் அமைச்சர்பற்றியும் அவருக்குக் கீழே உள்ள அமைச்சரே பிரதமரிடம் புகார்செய்த வரலாறு இல்லை. அழகிரி அந்த வரலாற்றைச் சாதித்திருக்கிறார். ரூபா1000 கோடி இழப்புக்கு அழகிரி காரணம் என்று புகார்செய்த ராஜாங்க அமைச்சர் ஜெனா அழகிரி விலகியபின் முழுப் பொறுப்புள்ள அமைச்சராக்கப்பட்டார்.

எப்போதுமே கட்சி ஸ்டாலின் பக்கமே இருந்துவந்திருக்கிறது; அழகிரியுடன் அல்ல. தேர்தல் சமயத்தில் அழகிரி போர்க் கொடி தூக்குவது கட்சியைப் பாதிக்கலாம் என்ற பயம் கட்சியில் சிலருக்கு இருக்கிறது. அழகிரி தொண்டர்களை அரவணைப்பவர் என்று சொல்லப்படுகிறது. இன்றைய அரசியலில் அரவணைப்பது என்றால் என்ன? தனக்கான ஒரு அடியாள் கூட்டத்தை வைத்துக்கொள்வதோ தனக்கு வரும் லாபத்தில் எல்லாருக்கும் பங்குகொடுப்பதோ அரசியல் ஆகுமா? நிலப்பிரபுத்துவ மா.'.பியா இலக்கணங்களை எல்லாம் நாம் அரசியல் நெறிமுறைகள் ஆக்கிவிட்டோம். உண்மையில் அழகிரிக்கும் ஸ்டாலினுக்கும் எந்தக் கொள்கைச் சண்டையும் இல்லை. அழகிரி அப்படி சித்தாந்தரீதியிலோ கொள்கைரீதியிலோ இதுவரை எந்தச் சண்டையும் போட்டதாக வரலாறும் இல்லை. காங்கிரஸுடன் கூட்டணி வேண்டுமா வேண்டாமா என்பதோ தே.மு.தி.க-வுடன் உறவு வேண்டுமா கூடாதா என்பதோ இதில் அசல் பிரச்சினையே இல்லை. அ.இ.அ.தி.மு.க. தவிர வேறு யாரோடும் எப்போதும் கூட்டணி வைக்கத் தேவையான நியாயங்களையும், கூடாது என்பதற்கான நியாயங்களையும் அவ்வப்போது எடுக்கும் முடிவுக்கேற்பச் சொல்வதில் பழுத்த அனுபவம் உடையவர் கருணாநிதி. தேவையென்று கருதினால் அவர் அ.இ.அ.தி.மு.க-வுடன்கூட கூட்டணி வைத்து அதை உடன்பிறப்புகள் ஒப்புக்கொள்ளும் விதத்தில் நியாயப்படுத்தக் கூடியவர்தான்.

அழகிரியின் பிரச்சினை அவருடைய தனிப்பட்ட பிரச்சினை மட்டுமே. அதில் அரசியல் சித்தாந்தம் ஏதுமில்லை. இப்போது கருணாநிதி எடுத்து வரும் உறுதியான முடிவுகள் தொடருமானால் அழகிரி செய்யக்கூடியவை மூன்றுதான். ஸ்டாலின் தலைமையை ஏற்றுக்கொண்டு தொடர்ந்து அரசியலில் நீடிக்கலாம். அதை ஏற்காமல் வெளியேறிக் கட்சியை உடைக்க முயற்சித்து வேறு கட்சிகளில் இணையலாம். அரசியலிலிருந்தே ஓய்வுபெற்றுத் தனக்குப் பிடித்தமான வேறு துறை சார்ந்த பணிகளில் ஈடுபடலாம். முதல் கடைசி வழிகள் மட்டுமே அவருக்குப் பயன் தரக்கூடியவை!


ஆரம்பித்திருக்கிறார்.

இந்தியாவில் வேறெந்தக் கட்சிக்கும் இல்லாத ஒரு "பெருமை" தி.மு.க.-வுக்கு இருந்துவருகிறது. மீதிக் கட்சிகளில் எல்லாம் பல கோஷ்டிகள் இருப்பார்கள். ஒவ்வொரு கோஷ்டியின் தலைவரும் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பார். தி.மு.க.-வில் மட்டும்தான் இருக்கும் எல்லா கோ'டிகளின் தலைவர்களும் ஒரே குடும்பத்திலிருந்து வந்தவர்கள். கட்சிக்குள் வேறு கோஷ்டிகளே கிடையாது.

ஒரு தந்தையாக கருணாநிதி அழகிரியை எப்படிக் கையாள்வது என்பதில் செய்த தவறுகளும் குழப்பங்களும்தான் தி.மு.க-வையே பாதிக்கும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டிருக்கின்றன. நல்ல பாடகராக வந்திருக்கக்கூடிய முதல் மகன் முத்துவை தேவையில்லாமல் எம்.ஜி.ஆருக்குப் போட்டி நடிகராகக் கொண்டுவர கருணாநிதி செய்த முயற்சிகள் முத்துவின் வாழ்க்கைப் உதவிகரமாக இருந்த ஸ்டாலின் தொடர்ந்து 40 ஆண்டுகளாகக் கட்சிப் பணியைச் செய்துவந்திருப்பவர்.


"ஸ்டாலின் தலைமையை ஏற்றுக்கொண்டு பேராசிரியர் அன்பழகன் ஆற்காடு வீராசாமி துரைமுருகன் முதலான சீனியர்கள் எல்லாம் கட்சியில் செயல்படத் தயாராக இருக்கும்போது நீயும் அப்படிச் செய்வதாயிருந்தால் கட்சியில் இரு" என்று அழகிரியிடம் மட்டும் கருணாநிதியால் சொல்லவே முடியவில்லை. அரச வம்சத்தில் இரு சகோதரர்களில் மூத்தவன் இருக்கும்போது இளையவனுக்கு எப்படி மகுடம் சூட்டுவது என்று குடும்பத்துக்குள் ஏற்படும் எதிர்ப்புக்கு நிகரானதாகவே இந்த விஷயமும் கருணாநிதி குடும்பத்துக்குள் இருக்கிறது. அதற்குப் பலியானது ஜனநாயக அமைப்பில் இயங்கும் தி.மு.க. என்ற கட்சிதான்.

அழகிரிக்குச் சார்பாகக் குடும்பத்துக்குள் வலிமையாக ஒலிக்கும் குரல் அவரது தாயார் தயாளு அம்மையாருடையது என்று பல நிகழ்வுகளின்போது செய்திகள் வெளியாகியிருக்கின்




# கப்டன் பிலிப்ஸ்

- சுரேஷ் கண்ணன் -




ரொம் ஹாங்ஸ் எப்போதுமே எனக்கு பிடித்தமானதொரு நடிகர். எனவே கப்டன் பிலிப்ஸ் பார்த்தேன். நல்லதொரு த்ரில்லர். சோமாலிய கடற்கொள்ளையர்கள் அமெரிக்க சரக்கு கப்பலொன்றை கடத்தும் முயற்சியின் தொடர்ச்சியில் அதன் கப்டனை சிறைப்பிடிக்கின்றனர். அவரை மீட்கும் முயற்சியை விறுவிறுப்பாக சொல்லியிருக்கிறார்கள். உண்மைச் சம்பவம் ஒன்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. "இந்தப் படத்தில் கப்பலின் கப்டன் பாத்திரத்தில் நடித்த ரொம் ஹாங்ஸை ஒரு ஹீரோ போல் சித்தரித்திருக்கிறார்கள், உண்மைச் சம்பவங்கள் வேறு மாதிரியாக இருந்தன" என்று நிஜமான கடத்தலின் போது கப்பலில் இருந்த சக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். என்றாலும் திரைப்படத்தில் ரொம் ஹாங்ஸ், தமிழ்நாட்டு கப்டன் விஜய்காந்த் போல் பாய்ந்து எட்டி உதைத்தெல்லாம் சண்டை போடாமல் அந்தச் சூழலில் ஒரு வயதானவர் என்ன செய்ய முடியுமோ அதை மாத்திரமே செய்திருக்கிறார்.

ரொம் ஹாங்ஸ் ஏன் அற்புதமான நடிகர் என்பதற்கான நிரூபணம் படத்தின் இறுதிக்காட்சியில் இருக்கிறது. கடத்தல்காரர்களிடமிருந்து மீட்கப்பட்ட பிறகு அந்த அதிர்ச்சியையும் திகைப்பையும் இத்தனை துல்லியமாக ஒருவரால் நடிப்பில் வெளிப்படுத்த முடியுமா என ஆச்சரியமாக இருக்கிறது. காட்சிகளின் நம்பகத்தன்மையை உருவாக்க அவர்களின் யோக்கியமான மெனக்கெடல்களை பிரமித்தேன்.

ஹொலிவுட்காரர்களுக்கு வில்லர்களாக சித்தரிக்க ஏதாவது ஒரு உருவகம் தேவைப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. ருஷ்யர்கள், இஸ்லாமியர்கள், எதிரி நாடுகளின் தலைவர்கள்.. இந்த விஷயத்தில் அவர்களுக்குப் பஞ்சமேயிருக்காது. உலக வரலாறு அவர்களுக்கான வாய்ப்பை தொடர்ந்து வழங்கிக் கொண்டேயிருக்கும். அந்த வகையில் இப்போது சோமாலிய கடற்கொள்ளையர்கள். உலகத்தைக் காக்க வந்த பெரியண்ணன் அவதாரத்தை அமெரிக்கத் திரைப்படங்கள் தொடர்ச்சியாக கட்டமைப்பதை இந்த திரைப்படமும் பின்பற்றுகிறது.

அணுஉலைகளின் கழிவுகள் சோமாலியக் கடற்கரைகளில் கொட்டப்படுவது பற்றி, சர்வதேச கடல் எல்லையை மீறி பன்னாட்டு நிறுவனங்களின் பகாசுர கப்பல்கள் மீன்வளத்தை சுரண்டிச் செல்வதின் மூலம் ஏழை நாடுகளின் வயிற்றில் அடிப்பது பற்றி, வளர்ந்த நாடுகளின் ஆயுத வியாபாரிகள் தங்களின் விற்பனைக்காக இவ்வாறான அரசியல் குழப்பமுள்ள நாடுகளில் கலகத்தைப் பெருக்கும் அயோக்கியத்தனங்கள் பற்றி ஏதும் உரையாடாமல் "வெள்ளையா இருக்கிறவன் பொய் சொல்ல மாட்டாண்டா" என்று கறுப்பு வெள்ளையாக சம்பவங்களை சித்தரிக்கும் அதே முறையையே இந்த ஹொலிவுட் திரைப்படமும் பின்பற்றுகிறது என்பதுதான் இதிலுள்ள அரசியல் ரீதியான குறைபாடு. (மீன்பிடித்தல் அராஜகம் பற்றிய ஒரே ஒரு சிறு வசனம் விதிவிலக்கு).

இந்தப் பிரச்சினைகளைப் பற்றி நமக்கென்னவா? அப்படியானால், நல்ல த்ரில்லர். சுவாரசியமாக ரசிக்கலாம்.

# வாழைப்பழக் காசு!



அசாம் தொலைக்காட்சி அதிகாரி ஒருவர், தன்னுடைய தலைமை அதிகாரியைப் பற்றி சொல்லிச் சிரித்தார். அந்தத் தலைமை அதிகாரி, அலுவலக காரில் போவாராம். காரை ஒரு பக்கமாக நிறுத்தி, ட்ரைவரை, "வாழைப்பழம் என்ன விலை..." என்று கேட்டு வரச் சொல்வாராம். பக்கத்துக் கடையில் கேட்டால், "காரில் வந்திருப்பவர்" என்று எண்ணி, விலையைக் கூட்டிச் சொல்லுவர் என்று, சற்று தொலைவில் உள்ள கடையில், பழம் வாங்கி வரச் சொல்லுவாராம். அதுவும் எப்படி என்று நினைக்கிறீர்கள்... ட்ரைவர், நடந்து சென்று, வாழைப்பழ விலை கேட்டு, திரும்பி வந்து, இவரிடம் விலை சொல்லி, காசை வாங்கிக் கொண்டு, கடைக்குப் போவாராம்.

வாழைப்பழத்தோடு திரும்பியவரிடம், ஒரு முறை இவர், "இந்தப் பழம் நல்லா இல்லை, பழத்தைக் கொடுத்து, காசை வாங்கி வா..." என்று, பழையபடி நடக்க வைத்தாராம். ட்ரைவர், அந்த அதிகாரி முன்னாலேயே, வாழைப்பழத்தை விழுங்கி விட்டு, தன் சட்டைப் பையிலிருந்து, காசை எடுத்துக் கொடுத்தாராம். இதனால், ஆண்டானுக்கும், அடிமைக்கும் பலத்த சண்டையாம்.

- சு. சமுத்திரம், 'எனது கதைகளின் கதைகளில்' நூலிலிருந்து...

நட்புறவு யாத்திரை நடத்தி பெரும் ஆரவாரம் எதுவும் செய்யாமல் யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் ஒரு புற்று நோய் ஆஸ்பத்திரியை கட்டிக் கொடுத்தவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

# இங்கு இன்னும் அறம் அழிந்து போகவில்லை!

- ஸ்ரீதரன்-சுகு -



தமிழ் சிங்கள சமூகங்களைச் சேர்ந்த சில இளம் மனிதர்களின் முன்னெடுப்பில் இது சாத்தியமாகி இருக்கிறது.

இந்த வைத்தியசாலையை அமைப்பதற்கு சமூக அக்கறையுள்ளவர்கள் நிதி, நிலம் என்பவற்றை வழங்கியிருக்கிறார்கள.

"கூட்டத்தில் கூடிநின்று கூவிப்பிதற்றலன்றி நாட்டத்தில்" கொள்ளாத மனிதர்கள் ஆதிக்கம் செலுத்தும் நாட்டில் - சமுதாயத்தில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள்.

தமது எண்ணங்களை முன் நிறுத்தி பெருவாரியான சாமானிய மக்களின், புலம் பெயர்ந்தவர்களின் ஆதரவுடன் இந்தச் சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள். சிறுவர்கள் தமது உண்டியல்களைக் கூடக் கொடுத்தார்களாம். புலம்பெயர்ந்த வைத்தியர் ஒருவர் நாலரைக்கோடி உதவியிருக்கிறார்.

இதனை முன்னெடுத்த ஒருவரின் தந்தை தனது 80 வயதில் 19 நாட்கள் இவர்களுடன் சேர்ந்து நடந்திருக்கிறார்.

இவர்களில் சிலரின் உறவுகளும் புற்றுநோயால் மரணமாகியிருக்கிறார்கள்.

அவர்கள் 300 மில்லியன்களுக்குமேல் திரட்டி சாதித்திருக்கிறார்கள். மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் ஒவ்வொரு உதவிக்கும் சதத்திற்குமான கணக்கையும் வைத்திருக்கிறார்கள்.

இதற்காக 700 கிலோ மீற்றர்கள் வரை நடந்திருக்கிறார்கள்.

ஊரை அடித்து உலையில் போடும் இலட்சிய புருசர்களாக நாடகமாடும் அரசியல்வாதிகள் நிறைந்த சமூகத்தின் மத்தியில் இது நிகழ்ந்திருக்கிறது.

"தருமங்கள் யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

"தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்"

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" போன்ற அறக் கூற்றுக்கள் நிறைந்த மொழி கொண்ட சமூகத்தின் அரசியல் அறம் இப்படித்தான் இருக்கிறது. விதிவிலக்குகளாக சிலர் இருக்கிறார்கள்.

இந்த ஆஸ்பத்திரியைக் கட்டியவர்கள் சமூக முன்னோடிகள். இவர்கள் விளம்பரத்திற்காக எதையும் செய்யவில்லை. இவர்களிடம் நாம் கற்க வேண்டியிருக்கிறது.

2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் சமாதானத்திற்கும் நட்புறவுக்குமான நடைபயணத்தை அவர்கள் தெற்கில் இருந்து ஆரம்பித்தார்கள். அப்போதுதான் இந்த எண்ணம் உருவாகியிருக்கிறது.

வடபகுதி புற்றுநோயாளர்கள் மஹரகம கண்டி, கொழும்பு என்று அலைவதில் எத்தனை சிரமம் என்பது அதனை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்

இங்கு தேவை அறிந்து காரியமாற்றியிருக்கிறார்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு" வாழ்பவர்கள் இவர்கள் தான்.

வரலாற்றில் இப்படியான மனிதர்கள் உருவாகிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.


எமது நாளாந்த பிரதான பிரச்சினைகள் என்னவென்று அடையாளம் கண்டு கொள்வதில் இம்மாதிரியானவர்களின் அனுபவங்கள் முக்கியம்.

இனமத பேதம் கடந்து இந்த பேருதவி பெரும்பாலும் சாதாரண மக்களால் வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கு வாழ்வதற்கான நம்பிக்கைகளை ஏற்படுத்துபவர்கள் இவர்கள் தான்.

இந்த நாட்டில் சமூகங்களிடையே நல்லிணக்கத்தை கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கையை இவர்கள் ஏற்படுத்துகிறார்கள்.

# கம்ப்யூட்டர் காவலாளி!



கம்ப்யூட்டரில் அன்ட்டி வைரஸ் புரோகிராம் பதிந்து கொண்டு செயல்படுத்துவது என்பது முக்கியமான ஒரு பாதுகாப்பு வளையமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இணையத்தில் இலவச அன்ட்டி வைரஸ் தொகுப்புகள் அதிக எண்ணிக்கையில் கிடைப்பதால், அனைவருமே இந்த தொகுப்புகளைப் பயன்படுத்துகிறோம்.

அன்ட்டி வைரஸ் தொகுப்புகள், நாம் கம்ப்யூட்டரை இயக்கும்போதே, தாங்களும் இயங்கத் தொடங்குகின்றன. இணையத் தொடர்பின் போது, கம்ப்யூட்டருக்குள் வரும் மால்வேர், வைரஸ் போன்றவற்றைக் கண்காணிக்கின்றன. ஏதேனும் தென்பட்டால், உடனே நமக்கு அறிவிக்கின்றன. நாம் அமைக்கும் அமைப்பின் அடிப்படையில், அவற்றை நம்மிடம் கேட்டு அழிக்கின்றன. அல்லது நீக்கிவிட்டு தெரியப்படுத்துகின்றன.

இது போல இயக்கம் இருக்கும் சூழ்நிலையில், நாமாக நம் கம்ப்யூட்டரில் உள்ள பைல்களை, அன்ட்டி வைரஸ் கொண்டு ஸ்கான் சோதனை செய்ய வேண்டுமா? எதற்காக நாம் வேறு கூடுதலாக இந்த ஸ்கான் சோதனையை மேற்கொள்ள வேண்டும்? இதில் அதிக நேரம் வேறு செலவாகிறதே" என்று சிலர் எண்ணுகின்றனர்.

ஆனால், நாமாக ஸ்கான் செய்திடும் பணியும் நமக்கு உதவுகிறது. அத்தகைய நிலைகளாகக் கீழே குறிப்பிட்டவற்றைக் கருதலாம்.

1. நீங்கள் முதன் முதலில் அன்ட்டி வைரஸ் புரோகிராம் ஒன்றை இன்ஸ்டோல் செய்கையில், பதிவது முடிந்தவுடன், அது தானாக, கம்ப்யூட்டரில் உள்ள பைல்கள் அனைத்தையும் ஸ்கான் செய்கிறது. இதன் மூலம், உங்கள் கம்ப்யூட்டர் எந்தவிதமான வைரஸ் புரோகிராம்களையும் கொண்டிருக்கவில்லை என்று உறுதிப்படுத்திக் கொள்கிறது. இருப்பினும், இந்தப் பைல்களை நீங்கள் பின்னர் இயக்குகையில், அப்போதும் அவற்றை ஸ்கான் செய்கிறது.

2. அன்ட்டி வைரஸ் புரோகிராம்கள் "definition files" என்னும் ஒரு தொழில் நுட்பத்தினைத் தங்கள் சோதனைகளில் கையாள்கின்றன. அனைத்து வைரஸ் இயக்கம் குறித்த குறியீடுகள் அடங்கிய பைல்கள் இவை. இவற்றை இயக்கி அதன் அடிப்படையில், கம்ப்யூட்டருக்குள் வரும் பைல்கள் மால்வேர் புரோகிராம்களா என்பது சோதனை செய்து கண்டறியப்படுகிறது. இந்த "definition files" தொடர்ந்து அப்டேட் செய்யப்படுகின்றன. இந்தச் சோதனையில், ஏதேனும் ஒரு மால்வேர் புரோகிராம், அது தங்கியிருக்கும் எக்ஸிகியூடபிள் பைலுடன் ஒட்டிக்கொண்டு இயங்காமல் இருப்பின், அன்ட்டி வைரஸ் ஸ்கான் செய்திடுகையில், அதனைக் கண்டறியும் வாய்ப்பு நழுவப்படலாம். இப்படிப்பட்ட மால்வேர் புரோகிராம்கள், நாமாக ஸ்கான் செய்திடும்போதுதான் கண்டறியப்படும்.

3. கம்ப்யூட்டர் ஒன்றில், ஓர் அன்ட்டி வைரஸ் புரோகிராம் மட்டுமே இயங்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட அன்ட்டி வைரஸ் புரோகிராம் இயங்கினால், ஒன்றை ஒன்று வைரஸ் என்று அறிவித்து குழப்பத்தினை உண்டாக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட அன்ட்டி வைரஸ் புரோகிராம் கொண்டு, கம்ப்யூட்டரை சோதனை செய்திட வேண்டும் என எண்ணினால், ஒன்றை இயங்கா நிலையில் வைத்து, அதனை, நாமாக ஸ்கான் செய்திடுகையில் பயன்படுத்தலாம்.

உங்கள் கம்ப்யூட்டரை நம் வீடு போல எண்ணிக் கொள்ளுங்கள். அதில் உள்ள அன்ட்டி வைரஸ் புரோகிராம் வாசலில் நிற்கும் காவலாளி போல ஆகும். அவர் உங்கள் வீட்டின் உள்ளே நுழையும் ஒவ்வொருவரையும், சோதனை செய்து, சரியானவர் என்று அவருக்கு உறுதியாகத் தெரிந்த பின்னரே, வீட்டினுள் உள்ளே விடுகிறார். அவ்வாறு இல்லாமல், உள்ளே ஒருவர் நுழைந்த பின்னரே, நாம் அவரைக் கண்காணிக்கலாம் என்றால், அல்லது நமக்கு நேரம் கிடைக்கும்போது, வீட்டைச் சுற்றி வந்து சோதனையிட்டு அறியலாம் என்றால், நாம் அறியாமல் உள்ளே வந்தவர் தன்னுடைய திருட்டு வேலையைத் தொடங்கி விடலாம் அல்லவா? எனவே, அன்ட்டி வைரஸ் புரோகிராம் தானாக சோதனை செய்வதனையும், ஸ்கான் செய்வதனையும் நிறுத்தக் கூடாது. எனவே, குறிப்பிட்ட சூழ்நிலையில் நாமாக முழு சோதனை செய்வதும், எப்போதும் மேம்படுத்தப்பட்ட நிலையில், அன்ட்டி வைரஸ் புரோகிராம் இயங்குவதுமே, நம் கம்ப்யூட்டர் பாதுகாப்பான நிலையில் இயங்குவதனை உறுதி செய்திட முடியும்.

# திருப்பித் தாக்கிய சன்னி லியோன்!

கனடாவைச் சேர்ந்த, பிரபல நடிகையும், மொடல் அழகியுமான, சன்னி லியோன், ஏடாகூடமான படங்களில் நடித்து பெயர் பெற்றவர். 32 வயதான இவர் சமீபகாலமாக, ஹிந்திப் படங்களிலும் நடித்து வருகிறார். சமீபத்தில், ஒரு ஹொலிவுட் படத்தில், குத்துச் சண்டை வீராங்கனையாக நடிப்பதற்கு, அங்குள்ள பிரபலமான குத்துச் சண்டை வீரர் ஒருவரிடம் பயிற்சி பெற்றுள்ளார். அந்தப் பயிற்சி மையத்துக்கு, அதிகமான வாடிக்கையாளர்கள் வருவதைப் பார்த்த சன்னி லியோனுக்கும், தானே அப்படி ஒரு பயிற்சி மையத்தை நடத்தி சம்பாதிக்கலாமே என்ற ஆசை வந்து விட்டது. லொஸ் ஏஞ்சல்சில், குத்துச் சண்டை பயிற்சி அளிக்கும் மையம் மற்றும் ஜிம் ஆகியவற்றை திறப்பதற்கான ஏற்பாடுகளில் இறங்கியுள்ளார். இதனால், அதிர்ந்து போயுள்ள, அந்த குத்துச் சண்டை வீரர், "நம்மிடமே பயிற்சி பெற்றுக்கொண்டு, நம் தொழிலுக்கு உலை வைத்துவிட்டாளே..." என, புலம்பி வருகிறார்.



# பாடசாலையின் சிறந்த நிர்வாகத்திற்கு ஒற்றுமையுணர்வு அவசியமானது

## யாழ்.ஆசிரிய வள நிலையமுகாமையாளர்

(திருநெல்வேலி)

பாடசாலையில் அதிபர், ஆசிரியர், பெற்றோர், நலன் விரும்பிகள் என அனைவரும் ஒன்றிணைந்து உழைப்பதன் மூலம் பாடசாலையின் முன்னேற்றம் அதீத வளர்ச்சியைக் காண்கிறது. இவ் வித்தியாலயம் குறைந்த காலப்பகுதியில் மிகச் சிறந்த செயற்பாட்டோடு இயங்குவதற்கு இங்குள்ள அனைவரதும் ஒற்றுமையே காரணமாகும் என யாழ்.ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் கே.இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

உயரப்புலம் மெ.மி.வித்தியாலயத்தின் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பகுதித் தலைவர் எஸ்.ஜெயகாந்தன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரைநிகழ்த்திய அவர், பிள்ளைகளைப் பெற்றோர் பாடசாலையில் சேர்த்து விடுவதுடன் தங்கள் கடமை முடிந்து விட்டது என எண்ணக் கூடாது. பிள்ளைகளின் கல்வியிலும், ஒழுக்கத்திலும் பெற்றோர் அதிக கவனம் செலுத்தல் வேண்டும். நல்ல அறிவு பூர்வமான கதைகளை அவர்களுக்கு சொல்ல வேண்டும்.

கால்கோள் விழாவில் இங்கு கலந்து கொண்ட மாணவர்கள் எதிர்காலத்தில் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று அதி உச்ச நிலையில் திகழ்வார்கள் என நான் இன்றே ஆரூடம் கூறுகின்றேன். அவர்களது திறமைகளை நான் நேரில் கண்டேன்.

நகர்ப்புறப் பாடசாலைகளை நாடி அங்கே பிள்ளைகளைக் கூட்டிச் செல்லாமல் உங்கள் அயல் பாடசாலையில் இப் பிள்ளைகளை நீங்கள் சேர்த்துள்ளீர்கள். உங்கள் நம்பிக்கை நிச்சயம் வீண் போகாது. திறமை மிக்க அதிபர், ஆசிரியர்கள் இப்பிள்ளைகளுக்கு சிறந்த மேலான கல்வியைப் புகட்டுவதற்கு இங்கே காத்திருக்கின்றார்கள். பிள்ளையின் வரும் காலம் வளமானதாக இருக்கும். அதில் சந்தேகம் இல்லை.

கல்வியோடு உடற்பயிற்சியிலும், மாணவர்கள் ஈடுபட வேண்டும் ஒழுக்கம் உயிரிலும் மேலானது ஒழுக்கத்தோடு சேர்ந்த கல்வி மாணவனை மேம்படுத்தும். விளையாட்டு மாணவனுக்கு உடல், உள வலிமையை ஊட்டுவதோடு உற்சாகத்தையும் தருகிறது என்றார். (137)


# கடமை பொறுப்பேற்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவின் சமூக சேவைகள் அலுவலராக செ.சிறிநிவாசன் கடமையைப் பொறுப் பேற்றுள்ளார். இதற்கு முன் இப் பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அலுவலராகக் கடமையாற்றிய எஸ்.பாலகுமாரன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுடன் மேலதிக கடமையாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் கடமையையும் கவனித்து வந்தார்.

தற்போது இவர் தனியே ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவின் கடமையை மட்டும் ஆற்றி வருகின்றார். வவுனியா மாவட்ட சமூக சேவைகள் அலுவலராக கடமை புரியும் செ.சிறிநிவாசன் மேலதிக கடமையாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் கடமையையும் ஆற்றிவருகின்றார். (90)

## பரமர் சங்கமம்



'பல நாட்கள்ளன் ஒரு நாள் அம்புடுவான்' எண்டவிசயம் தொழிலியை ஈடுபடுகினமோ புரியேல்லை. களவோட சண்டித்தனமும் வேறை!

கயிட்டப்பட்டு ஒரு தொழிலைச் செய்தா இந்தளவுக்கு சம்பாதிக்க முடியாதெண்டதாலோ என்னவோ களவுத் தொழில்லை ஈடுபடுகினம்? இல்லாட்டில் அதுவும் சும்மா சொகுசாச் செய்யக் கூடியதொழிலே? பல கயிட்டங்கள் படத்தானை வேணுடிக் கிடக்கு! களவையும் கற்று மற எண்டு அவ்வை சொன்னது வேறை விசயம்.

கடந்த வாரம் வெளியான செய்தி ஒண்டில 'ஆவா' குழுவைப் பற்றி அறிய முடிஞ்சுது. உந்தக் குழுவினராலை எத்தனை பேர் குடும்பம் குடும்பமாக ஆவா வாவெண்டு, அழுது புலம்பி மண்ணள்ளிக் கொட்டித் திட்டிச்சுதுகள் அதுகள் ஆவாவா வெண்டால் உவங்கள் நிம்மதியாவாழுவாங்களே!

தென்னிலங்கேலதான் உப்புடியான பாதாளக் குழுக்கள் இருக்குதெண்டு பிரசித்தம். இப்ப என்னடா எண்டா யாழ்ப்பாணப்பக்கத்திலேம் அப்புடியான கோஷ்டிகள் குழுக்கள் வெளிக்கிட்டிருக்குதுகள். உவங்கள் என்ன மனிசப் பிறப்போ அல்லாட்டி பேய் பிசாசோ?

உடுவில் பகுதிக்கை ஒரு வீட்டைபோய் களவெடுக்க விடாமல் வீரமாகப் போராடிய யாழ்ப்பாண இந்துக் கல்லூரி உயர்தர மாணவனை வெட்டிச்சாக்காட்டினாங்கள், தாய், தேப்பன் ஊனத்தோடை உயிர் வாழுதுகள். கடைசியா வெளிவந்த உயர்தரப் பெறுபேறுகளில் சாக்காட்டின பொடியன் ரெண்டு ஏச்சித்தி பெற்ற கெட்டிக்கார மாணவனெண்ணேக்கை வயிறெல்லாம் எரியுது.

உதுபோலதான், நாயன்மார்கட்டுப் பகுதியில ஒரு வீட்டுக்கை நுழைச்சவங்கள் 'எங்களைக்கண்டோடனை உள்ள பெறுமதியான பொருளுகளை நீங்களாகவே எடுத்துத் தந்திட்டீங்களெண்டால் நாங்க உங்களை அடிக்கவோ வெட்டவோ மாட்டம்' எண்டு புத்திமதி கூறிக்களவெடுத்துச் சென்டதாகவும் செய்தியள் வெளிவந்துச்சுது.

'ஹெல்மெட்'டைப் போட்டுக் கொண்டால் முகங்களை அடையாளம் பிடிக்க முடியாது இந்த நாளைக்கள்ளருக்கு அது வசதியாப்போட்டுது. மோட்டைச்சைக்கிளை ஒரு றவுண் போய் வந்தால் கொழுத்த சம்பாத்தியத்தோடை திரும்பலாம். வேலை வெட்டிக்குப் போட்டுவாற வாத்திப் பெட்டையளின்ர சங்கிலி, தாலி அறுபட்ட செய்தியள் மலிஞ்சே போச்சு.

உப்புடி எத்தினை சனங்கள் 'ஆவாவா வெண்டு' அந்தரிச்சுதுகள். அதுக்குத் தக்கே 'ஆவா' குழுவினர் மாட்டுப் பட்டுச் சினம். அவங்கட்டை இருந்து ரெண்டு கைக் குண்டுகள் 12 வாளுகள், 9 மோட்டைச் சைக்கிளெண்டு பிடிச்சதைப் பேப்பர்கள் படங்களில போட்டிச்சினம்.

வன்னியால சனம் அடிபட்டு வந்த 2009 திலை இருந்து உந்தக்கோஷ்டி ஞாயமான பேரின்ர தாலிக்கொடியள், சங்கிலியள் வேறைபொருட்களெண்டு பசியாறிப் போட்டாங்கள் 'பல நாள் கள்ளன் ஒரு நாள் அம்புடுவர்' னெண்ட பாடம் இவங்களுக்கு விளங்கேல்லைத்தானே என்ன நான் சொல்லுறே...

# கருத்துப்பகிர்வு

(திருநெல்வேலி)

தமிழ் அருட் கலைஞர் பயிற்சிக் கூடக் கால்கோள் விழா மற்றும் தமிழ் வழிபாட்டு மெய்யுணர்வுக் கருத்துப் பகிர்வு ஆகிய நிகழ்வுகள் எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10 மணி முதல் இணுவில் தெற்கு அருள் ஞானமிகு ஞானலிங்கேஸ்வரர் திருக்கோவில் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் வழிபாட்டு பயிற்சிக் கூடம் நடாத்தும் இந்நிகழ்வுக்கு மறவன்புலவு க.சச்சிதானந்தம் தலைமை தாங்கவுள்ளார்.

சைவத் தமிழ் அறிஞர்கள் பலரும் இந்நிகழ்வில் பங்கெடுக்கவுள்ளனர். இலங்கை சைவநெறிக் கூடம் இதற்கான அழைப்பை விடுத்துள்ளது. (137)

# தண்டவாளம் பொருத்தும்பணி புத்தூர் சந்திவரை நிறைவு

(கொடிகாமம்)

யாழ்ப்பாணம் நோக்கிய புகையிரத பாதையின் தண்டவாளம் பொருத்தும் பணி மீசாலை புத்தூர் சந்தி வரை நிறைவடைந்துள்ளது.

எழுதுமட்டுவாள் வரையான பகுதிக்கு புகையிரதம் மூலம் பாதைக்கு கல்லுப்போடும் பணி நடைபெற்று வருகின்றது. மீசாலை புத்தூர் சந்திவரையான பகுதிகள் தண்ட வாளங்கள் சிலிப்பர் தூண்களோடு பொருததும் பணி நிறைவடைந்துள்ளதுடன் ஒட்டும் பணியும் நிறை வடைந்துள்ளது.

மேலும் புகையிரத பாதையில் உள்ள வீதிக் கடவைகள் எல்லாம் புகையிரத பாதையின் உயரத்திற்கேற்ப கல்லுப் போட்டு செப்பனிடப்பட்டுள்ளதும் குறிப்படத்தக்கது. (130)



யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பொங்கல் நிகழ்வைக்காணலாம். (105)

# வீதிப்புனரமைப்பு பயணிகள் மகிழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கைதடி வடக்கு வன்னியசிங்கம் வீதியின் முதலாம் ஒழுங்கை சாவகச்சேரி பிரதேசசபையால் 3 இலட்சம் ரூபா செலவில் கிரவல் இடப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இவ் வீதி கடந்த 60 வருட காலமாக எதுவித புனரமைப்பும் காணாத நிலையில் மிகவும் சீரழிந்த நிலையில் இருந்தது. 200 மீற்றர் தூரமான இந்த வீதி தற்போது புனரமைக்கப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டதை இப் பிரதேச மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். (90)

# முரசின் இன்றைய பலன்



(22.01.2014 புதன்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 09 ஆம் திகதி.
அத்தம் நட்சத்திரம் பி.இ.12.25 வரை.
பின் சித்திரை. ஷஷ்டி / சித்தம்.
இராகு காலம் 12.35 - 02.05 வரை. சுபநேரம் 05.05 - 06.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெளியூர் வேலைவாய்ப்புக்காக சம்பளமற்ற விடுப்பு எடுத்தல் முயற்சி இழுபடல், நீண்ட நாட்களாக வராதிருந்த கடன்கிடைப்பதால் மகிழ்வு. |
| ரிஷபம் | நொந்த உள்ளத்திற்கு ஆறுதலான வார்த்தை கூறியதால் மருந்தாக இருத்தல், தெய்வதலங்களுக்கு யாத்திரை செய்ய மனம் ஏவல். |
| மிதுனம் | வெளியூரில் இருக்கும் பிள்ளைகளுடன் கதைத்ததால் சந்தோஷம், வெடி பொருட்களை அவதானமின்றி கொளுத்தியதால் காய மேற்படல். |
| கடகம் | பழவகைகளில் இரசாயனப் பொருட்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதலாதல், இழுபட்டுக் கொண்டிருந்த விவாகப்பேச்சு முற்றும் பெறும் சாதக நிலை ஏற்படல். |
| சிம்மம் | உள்ளூரில் அரசுப்பணிகிடைப்பதால் தேடிவந்த வெளியூர் பயணத்தைக் கைவிடல், பிரயாணத்தில் பக்கத்தில் இருப்பவரின் மீது சந்தேகம் ஏற்பட்டதால் விழிப்பாக இருத்தல். |
| கன்னி | புதிதாக அமைக்கப்பட்ட மனையில் குடியேறுவதால் மகிழ்ச்சி, கொடுத்த கடனை மீளப்பெறச் சென்றபோது பணம் போய்விட்டமை அறிந்து மனம்வருந்தல். |
| துலாம் | புதிய காரியமொன்று தொடங்க முற்படுகையில் ஏழரைச்சனி என அறிந்து கைவிடல், இல்லக்கிழத்தியுடன் ஏற்பட்ட தகராறு பெற்றோரின் சமரச முயற்சியினால் நீங்கிவிடல். |
| விருச்சிகம் | அஷ்டமத்து வியாழனால் பயண முயற்சியை ஒத்திவைத்தல், பொறுப் பின்றி கடன்கேட்டதால் நம்பகத் தன்மை. |
| தனுசு | தங்கமுலாம் பூசிய நகையை அடகு வைக்க முயல்கையில் காவலரை வரவழைத்தல், நீரிழிவு நோயினால் உடல் நிலைபாதிப்பு. |
| மகரம் | நாகதோஷம் காரணமாக தடைப்பட்டு வரும் திருமணம் சாந்தி மூலம் நிறைவேறல், திடீர் பரிசோதனைக் குழுவின் வருகையால் பணியகத்தில் பதகளிப்பு ஏற்படல். |
| கும்பம் | உரிய நேரத்தில் வைத்தியத்தை நாடாமையினால் நோய் முற்றி விசனமடைதல், எதிரியைக் கண்டும் காணாமல் போனதினால் வரவிருந்த ஆபத்து விலகிவிடல். |
| மீனம் | அவதானத்தை மேற்கொண்டதால் துயர்விலகல், அதி காலையில் கண்ட கெட்ட கனா பலித்துவிடுமா என நினைத்து அச்சமடைதல். |

# சனசமூக நிலையங்களின் பங்களிப்பு

# கிராமத்தின் அபிவிருத்திக்கு அவசியம்



(வேலணை)

வேலணை பிரதேச சபையின ஆளுகைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் புதிய நிர் வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

இவ்வருடத்தின் முதல் இரு மாதங்களுக்குள். சனசமூக நிலையங்களின் நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டும் என வேலணை பிரதேச சபையின் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசாவினால் (போல்) ஏற்கனவே அறிவித்தல் வழங்கப்பட்டதற்கமைவாக கடந்த 17ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலை யத்தின் புதிய நர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வேலணை பிரதேச சபை தவிசாளர், சனசமூக நிலையங்கள் கிராமத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கு முதுகெலும்பாக காணப்பட வேண்டும். எனவும் புதிய நிர்வாகம் கிராம மக்களுக்கு சேவைசெய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இப்பிரதேசத்திற்கு அபிவிருத்தி வேலைகள் எம்மால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்தோடு எமது கட்சி நாடாளுமன்று உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து உதவித் தொகைகள் வழங்கப்பட்டுவரு கின்றமை குறிப்பிடத்தக்கது என்றும் தெரிவித்தார்.

# வடமராட்சியின் தொல்பொருட் சின்னமான மாயக்கை குகை பாதுகாக்கப்பட வேண்டும்

## சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி மண்ணின் பெருமையை உணர்த்தி நிற்கும் பொககிஷங்களில் ஒன்றான மாயக்கை குகை நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு திண்மக் கழிவுகளாலும் பற்றைகளாலும் சூழ்ந்து அடையாளம் தெரியாது அழிந்து வருவதாக சமூக ஆர்வலர்களால். கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அல்வாய் கிழக்கு ஜே/380 கிராம சேவகர் பிரிவில் மணியம் பாடசாலைக்கருகில் உள்ள கோபாலசாமி பரமேஸ்வரி என்பவரது சொந்தக் காணியில் 1968 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்லுடைக்கும தொழிலில ஈடுபட்டிருந்த வேளை மாயக்கை குகைகண்டு பிடிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

அன்றைய காலகட்டத்திலிருந்து இக் குகையை வரலாற்று ரீதியான சந்தேகங்களுடன் அகில இலங்கை ரீதியாக உலக நாடுகள் பலவற்றிலும் பரபரப்பாக பேசுமளவுக்கு ஈழத்தில் தலை சிறந்த எழுத்தா ளர்களினால் கவனத்துக்கு கொண்டுவரப் பட்டு அரச தொல் பொருள் ஆய்வாளர்களினால் பலகோணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு பாதுகாக்கும் பொறுப்பை ஆக்கிராமத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பிற்காலத்தில் மேலும் பல ஆய்வுகள் எடுக்கப்பட்டு எதிர்கால சந்ததியினர்களுக்கு அன்று உருவாகிய எழுத்தாளர்களினால் பல கட்டுரைகள் எழுதபபட்டு அவர்கள் மறைந்தாலும் அவை இன்றும் பேணப்பட்டு வருகின்றது எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இன்றுள்ளவர்களினால் பேணிகாக்க முடியாமல் கவனயீனத்தால் எதிர்கால சந்ததியினர் கண்டு கொள்ள முடியாத நிலையிலும் மண் கல்லுடன் குப்பைகளும் மூடப்பட்டு பற்றைகளால் சூழ்ந்து மேற்படி தனியார் காணியில் காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றது.

கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாயக்கை குகையை வடமராட்சி மண்ணின் பொக்கிஷமாக அழியவிடாமல் எதிர்கால சந்ததியினருக்கான அக்குகை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் ஆர்வலர்கள் கவலையுடன் குறிப்பிட்டுள்ளனர். (116)

# தனது பிள்ளைகளை காண ஏங்கும் முதியோர் இல்லத்தில் வாழும் தாய்

கைதடி முதியோர் இல்லத்தில் கடந்த ஐந்து வருட காலமாகத் தங்கி வாழும் செல்லத்துரை பூமணி என்னும் 75 வயதுடைய மூதாட்டி ஒருவர் தனது இறுதிக் காலத்தில் தான் பெற்ற நான்கு பிள்ளைகளையும் பார்க்க வேண்டும் எனவும், அவர்களோடு சேர்ந்து வாழ வேண்டும் என்றும் விருப்பம் கொண்டதினால அவர்களை எதிர்பார்த்து இல்லத்தில் வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கின்றார். இவரது தாய்ப்பாசம் கண்டு பலரும் மனம நெகிழ்ந்துள்ளனர்.

கண்டியில் வாழ்ந்த போது இவரது கணவன் காலமானார். இவரது நான்குபிள்ளையில் ஒரு மகன் பொலிஸ் சேவையிலும் மற்றைய மகன் வேறு இடத்தில் லிகிதராகவும் இருந்த போது மற்றொரு மகள் ஆசிரியையாகவும் இருந்துள்ளார். இன்னொரு மகளும் உண்டு.

கலவரத்தைத் தொடர்ந்து திக்குத்திக்காத அனைவரும் பிரிந்த நிலையில் எவ்வளவோ கஷ்டத்துக்கு மத்தியில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். பின்னர் இடப்பெயர்வுகளின் போது வன்னிக்குச் சென்று மீண்டும் யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை கற்கோவளம் நெல்லண்டையில் வாழ்ந்தார். இறுதியில் இயலாத நிலையில் சிலரால் கைதடி முதியோர் இல்லத்தில் 2009 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டார்.

தற்போது பிள்ளைப் பாசத்தால் இவர் துடிக்கின்றார். தமது நான்கு பிள்ளைகளின் பெயர்களையும் நினைவில் வைத்து சொல்கின்றார். இவரைப் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (137)




**கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினவிழாவும் கல்லூரி மண்டபத்தில் அதிபர் தி.வரதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.** (90)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மருதனார் மடம் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள இராமநாதேஸ்வரர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை முற பகல் 10 மணி முதல் 11 மணி வரையான காலப்பகுதியில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலா பிஷேகம் நடைபெற வுள்ளது..

# ஆயுர்வேதம்

## தோல்நோய்கள் தீர

## சரியான உணவுப் பழக்க வழக்கம்

விடுதிகளில் தங்கியிருந்து படிப்போருக்கோ வேலை செய்வோருக்கோ சில விசேட உபாதைகள் ஏற்பட வாய்ப்புண்டு. வீட்டுச் சாப்பாட்டைப் போல விடுதிச் சாப்பாடு அமைய வாய்ப்பில்லை. பலருக்கும் சமைத்து வழங்கப்படும் உணவைத் தொடர்ந்து சாப்பிட வேண்டிய நிர்பந்தம் உள்ளவர்களுக்கு உடலில் ஒருவித பகைப் பொருள்களால் ஏற்படும் உபாதை உண்டாக வாய்ப்பிருக்கிறது.

காலை, மதியம், இரவு என்று மூன்று நேரமும் விடுதி உணவானது வயிற்றில் சேரும்போது, உடலிலுள்ள வாத - பித்த - கப தோஷங்களை இருக்கும் இடத்திலிருந்து நெகிழ வைத்துக் கிளறி விட்டு அவை முற்றிலும் வெளிப்படாமல் உடலின் உள்ளேயே தேக்கி வைக்கும் உணவுப் பொருட்களால், தொடை இடுக்கில் அரிப்பும், படையும், சொறிந்தால் வெள்ளை நிறத்தில் பொடிப் பொடியாக உதிர்வதும், எரிச்சலையும் உண்டாக்கும்.

பலருக்கும் சேர்த்து சமையல் செய்யும் இடங்களில் இரு உணவுப் பொருட்களின் சக்தி வாய்ந்த பரஸ்பர குணங்கள் ஒன்றுக்கொன்று எதிரிடையாக இருத்தல், சமமாக அதாவது ஒன்றுக்கொன்று மாறுபடாத ஒரே தன்மையுடையதாக இருத்தல், சில குணங்கள் சமமாகவும் சில எதிரிடையாகவும் கலந்திருத்தல், மேலும் செய்முறை, அளவு, தேசம், காலம், சேர்க்கை போன்றவை கவனத்தில் வைத்துச் சமைக்கப்படாதிருத்தல் இயல்பே.

வியாபாரத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் உணவு வகைகளால் நாக்கிற்கு ருசி கிடைக்குமே தவிர, ஆரோக்கியத்தை எதிர்பார்க்க இயலாது. உணவிலுள்ள பகைப் பொருட்களாலும் ஐந்து வகையான நபர்களுக்கு எந்தவிதமான கெடுதலும் ஏற்படுவதில்லை. உடற்பயிற்சி செய்பவர்கள், எண்ணெய்ப் பசையுண்டாக்கும் சிகிச்சை செய்து கொண்டவர்கள், பசித்தீ நன்கு வேலை செய்கின்ற நிலையிலுள்ளவர்கள், நடுவயதில் உள்ளவர்கள், நல்ல உடல் வலிமை பெற்றவர்கள் ஆகிய இந்த ஐந்து வகையான நபர்களுக்கு, சமுதாயச். சாப்பாட்டின் மூலம் தீங்கு ஏதும் ஏற்படுவதில்லை. மற்றவர்கள், மேற்கூறியவற்றைப் பெற முயற்சி செய்து நோய் எதிர்ப்பு சக்தியை அவற்றின் மூலம் வளர்த்துக் கொள்ளலாம்.

வெளிப்புறக் காரணங்களாலும் இந்தப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. உள்ளாடையில் சிறிதும் சோப்புத்துகள் இல்லாதவாறு நன்றாகத் தண்ணீர் விட்டு அலசி, வெயிலில் ஆடையின் உட்புறம் நன்கு படுமாறு உலர்த்தவும். நன்றாக ஆடை வெயிலில் காயுமாறு இட்டு வைப்பது ஒரு நல்ல கிருமி நாசினி முறையாகும். விடுதிகளில் தங்குவோர் மற்றவர்களுடைய துவாய், சோப் போன்றவற்றை மாற்றி உபயோகிக்கும் வழக்கம் பொதுவாகவே இருப்பதால், அவ்வாறு ஏற்படாதவாறு கவனமாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

தொடை பருத்து நடக்கும்போது உரசிக் கொள்ளும் நிலையில, தொடை இடுக்கில் புண் ஏற்பட்டு அரிப்பும் வியர்வைக் கசிவும் அதிகமிருக்கும். உடலை இளைக்கச் செய்யும் சிகிச்சை முறைகளால் மட்டுமே இப்பிரச்சினைக்குத தீர்வு கிடைக்கும். இரவில் படுக்கும் முன் இறுக்கமான உள்ளாடைகளை நீக்கிவிட்டு, தொளதொளவென்றிருக்கும் ஆடைகளை அணிந்து கொள்வதே நல்லது.


தொடை இடுக்குப் பகுதியில் அமைந்துள்ள தோலின் சகிப்புத் தன்மையை அதிகப்படுத்தவும், தோலுக்கு நல்ல பலத்தை ஏற்படுத்தவும் ஆயுர்வேத மூலிகைத் தைலங்களாகிய நால்பா மராதி தைலம், தூர்வாதி தைலம், தினேசவல்யாதி. தைலம், ஏலாதி தைலம் போன்றவற்றில் ஒன்றிரண்டைத் தடவி, சுமார் அரை முக்கால் மணி நேரம் ஊறிய பிறகு காலையில் குளித்து வர வேண்டும். எண்ணெய்ப் பிசுக்கை அகற்ற சோப்களின் உபயோகத்தைக் குறைத்துப் பாசிப்பயறு, கடலை மா, அரிசி மா இவைகள் அதிகம் கலந்த அரப்புத்தூள் போட்டுக் கலந்த தண்ணீரை உப யோகப்படுத்தலாம்.

திக்தகம், மஹாதிக்தகம், சோணிதாமிர்தம், நிம்பாதி போன்ற கஷாயங்களில் ஒன்றை மருத்துவர் ஆலோசனைப்படி உள்ளுக்குச் சாப்பிட்டு வருவதும் நல்லது.

## அன்னாசிப்பழத்தின் மருத்துவ குணம்

மருத்துவ குணம் நிறைந்த பழவகைகளில் அன்னாசிப்பழமும் ஒன்று. அஸ்மாவைக் குணப்படுத்துவதில் இந்தப் பழம் முக்கிய பங்காற்றுகிறது.

பொதுவாக அஸ்மாவானது பல்வேறு தட்பவெப்ப சூழ்நிலைகள், ஒவ்வாத உணவுப் பொருட்கள், மலர்களின் மகரந்தம் போன்றவற்றினாலேயே ஏற்படுகிறது. அன்னாசிப் பழச்செடியின் தண்டில் "புரோமிலெய்ன்" என்ற பொருள் அஸ்மாவைத் தடுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. அதாவது அஸ்மாவினால் அதிகரிக்கும் வெள்ளையணுக்கள் உற்பத்தியை குறைத்துவிடும் தன்மை இந்த "புரோமிலெயன்" பொருள்களுக்கு இருக்கிறது என்று மருத்துவ வல்லுநர்கள் மேற்கொண்ட சோதனையில் தெரிய வந்துள்ளது. அஸ்மா மட்டுமல்லாமல் நுரையீரல் தொடர் பான நோய்களைக் குணப்படுத்துவதிலும் இந்த "புரோமி லெயன்" முக்கிய பங்காற்றுகிறது என்பதும் தெரியவந்துள்ளது.


யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் கால்கோள் விழா நேற்றுக்காலை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் தரம் ஒன்றில் இணைந்து கொண்ட மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் தரம் 2(ஈ) மாணவர்களின் கலைநிகழ்வையும் காணலாம்.

படங்கள்- ஆர்.இராஜகுமார்.

## பாடசாலைகளுக்கு பால் தேசிய திட்டம் இன்று ஆரம்பம்

பாடசாலை மாணவர்களுக்கு தினமும் இலவசமாக ஒரு கோப்பை பால் மற்றும் மதிய உணவு வழங்கும் தேசிய திட்டம இன்று அனுராதபுர விஜய மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளது என கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த சிந்தனையின் கீழ் பாடசாலை மாணவர்களுக்காக முன்னெடுக்கப்படும் பல்வேறு விசேட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இலங்கை முழுவதும் உள்ள 12,90,148 பாடசாலை மாணவர்களுக்கு பால் மற்றும் மதிய உணவு வழங்குவதற்கு ஆண்டுக்கு 3089.50 மில்லியன் ரூபா நிதியை அரசாங்கம் செலவிடவேண்டியுள்ளது. இத் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக 7786 பாடசாலைகளின் மாணவர்களுக்கு பால் மற்றும் மதிய உணவு வழங்கப்படும் அதற்காக 3290 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனூடாக பாடசாலை மாணவ மாணவியர் மத்தியில் நிலவும் போசாக்கின்மையை 4 வீதமாக குறைக்க முடியும் என்றும் பாடசாலை வருகையை 87 வீதமாக அதிகரிக்கச் செய்ய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புதிதாக ஒதுக்கப்பட்ட இடத்தில் சங்கானை மீன்சந்தை அமைக்கப்படும்



(சங்கானை)

சங்கானையில் மீன் சந்தையினை புதிதாக ஒதுக்கப்பட்ட இடத்தில் அமைப்பதற்கான இறுதித் தீர்மானம் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குறித்த பகுதியில் சந்தையினை அமைப்பது தொடர்பாக கடந்த ஒரு வருடங்களாக ஏற்படடிருந்த சர்ச்சைக்கு நேற்று முன்தினம் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையிலான விசேட கலந்துரையாடலில் முடிவு காணப்பட்டுள்ளது.

நெல்சிப் திட்டத்தின் மூலம் சுமார் 320 இலட்சம் ரூபா செலவில் சங்கானையில் மீன்சந்தையினை அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டு ஒரு வருடத்தை எட்டுகின்ற நிலையில், சந்தையினை அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்வதில் மாறுபட்ட கருத்துகள் நிலவின. தற்போது மீன்சந்தை அமைந்துள்ள பகுதி நகரின் சுகாதாரத்தையும் அப்பிரதேசத்தின் சுற்றுச்சூழலையும் பாதிப்பதாகஅமைகிறது என்ற நோக்கின் அடிப்படையிலும் நகரின் எதிர்கால அபிவிருத்திக்கு இடையூறாக அமைகின்றது என்ற சிந்தனைக்கமைவாகவும் குறித்த பகுதிக்கு அப்பால் அமைந் துள்ள இடமொன்றில் மீன்சந்தையினை புதிதாக நிர்மாணிப் பதற்கு பிரதேச ஒருங்கிணைப்புக குழு அனுமதியினை வழங்கியிருந்தது.

இந்நிலையில், புதிதாக தெரிவு செய்யப்பட்ட .பகுதியில் சந்தையினை அமைப்பதில் மக்களிடையே நிலவிய மாறுபட்ட கருத்துகளின் விளைவாக சந்தை அமைவிடம் தொடர்பாக வலி.மேற்கு பிரதேசசபையால் இறுதித் தீர்மானம் எட்டப்படாதிருந்த நிலையில். நாடாளுமன்ற உறுப்பினரும் சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத தலைவருமான மு.சந்திரகுமார் வலி.மேற்கு பிரதேச பையின் உறுப்பினர்கள், சந்தை வர்த்தகர்கள், மக்கள் பிரதிநிதி களை ஒன்றிணைத்து விசேட கலந்துரையாடலை மேற்கொண்டு, புதிதாக தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் மீன்சந்தையினை அமைப்பதற்கான இறுதித்தீர்மானத்தை வெளிப்படுத்தினார்.

இக் கலந்துரையாடலில் வலி.மேற்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சி தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) மற்றும் பிரதேசசபைஉறுப்பினர்களான செல்வகுமார், இராசதுரை, காங்கேயநாதன், சபாநாயகம், ஆகியோரும் சங்கானை பிரதேசசெயலக உதவித்திட்டப் பணிப்பாளர் சிவகுமார், கமநல சேவை உதவி ஆணையாளர் பற்றிக்றஞ்சன், வலி.மேற்கு பிரதேசசபை செயலாளர் சாரதா தேவி, பொதுச் சுகாதார பரிசோதகர் சோளன், சங்கானைப் பட்டின அபிவிருத்திச்சபைத் தலைவர் சிவபாலன், மற்றும் பிரதேசசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கானை வர்த்தக சங்கத்தினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சந்தை வர்த்தகர்கள் எனப் பலரும கலந்து கொண்டனர்.

## பாவனைக்குதவாத நெத்தலியை பொதி செய்தவருக்கு அபராதம்

பாவனைக்குதவாத 10,000 கிலோகிராம் நெத்தலியை விற்பனை செய்யும் நோக்கில் பொதியிட்டதாக குற்றஞ்சாட்டப் பட்டுள்ள சந்தேகநபருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மாரவில நீதவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர் ஆஜர்படுத்தப் பட்டதன் பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, நுகர்வோர் விவகார அதிகாரசபையின் பிரதேச விவகாரங்க ளுக்கு பொறுப்பான பிரதிப் பணிப்பாளர அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

தங்கொட்டுவ, ஹால்தடுவன பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில், சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது மிருகங்களின் உணவிற்காக குறித்த நெத்தலி இறக்குமதி செய்யப்பட்டதாக, சந்தேகநபர் கூறியுள்ளார்

சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார், பாவனைக்குதவாத குறித்த நெத்தலியை அழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணம்–இந்தியா நேரடி விமான சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும் இந்தியாவிற்கும் இடையில் நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக இந்திய தூதரக அதிகாரி வீ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் கப்பல் சேவையொன்றையும் விரைவில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு விடயங்களும் வடக்கின் பொருளாதாரத்தை மேம்படுத்தும். இந்திய நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருகின்றன என்றார்.

## சேவல் சண்டை சூதாட்ட நிலையம் முற்றுகை

(சிலாபம்

பங்கதெனிய குமாரகட்டு, நெலும்குளம் பிரதேசத்தில் சேவல் சண்டை சூதாட்ட நிலையமொன்றை நேற்று முன்தினம் இரவு முற்றுகையிட்டதுடன், சந்தேகத்தின் பேரில் 09 பேரை கைதுசெய்ததாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கிருந்து 18 மோட்டார் சைக்கிள் 6 துவிச்சக்கரவண்டிகள் ஒரு முச்சக்கரவண்டி ஒரு வான் மற்றும் 2 சண்டைச் சேவல்கள கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேசத்திலுள்ள வீடொன்றின் பின்புறத்தில் சில காலமாக சேவல் சண்டை சூதாட்டம் நடைபெறுவதாக தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து, அங்கு சென்று முற்றுகையிட்டதாகவும் சூதாட்டத்திற்கு வந்திருந்தோரில் சிலர் இதன்போது தப்பிச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கிளிமாவட்ட இராணுவத் தளபதி ஆளுநருடன் சந்திப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு புதிய இராணுவத் தளபதியாக பதவியேற்றிருக்கும் மேஜர் ஜெனரல் சுடந்த ரணசிங்க கடந்த 18 ஆம்திகதி வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறியை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

2014 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டங்கள் குறித்து இரு கலந்துரையாடினார்கள் ஆளுநரும் கிளிநொச்சி மாவட்ட புதிய இராணுவத் தளபதியும் ஞாபகார்த்தப் பரிசுகளை பரிமாறிக் கொண்டார்கள்.

கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி வடமாகாணத்தின் இடர்காலப்பகுதியில் நீண்டகாலமாக கடமையாற்றிய அனுபவம் மிக்கவர். மேஜர் ஜெனரல் சுடந்த ரணசிங்க பல ஆண்டுகளாக புனர்வாழ்வு ஆணையாளரநாயமாகத் கடமையாற்றியவர்.

முன்னாள் புலிகளுக்கு புனர்வாழ்வளிப்பதிலும் அவர்களை அவர்களது குடும்பங்களுடன் இணைப்பதிலும் அளப்பரிய சேவையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது


## ஆவரங்கால் பகுதியில் கோழிகள் திருட்டு

ஆவரங்கால் சர்வோதைய வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் 12 கோழிகள் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல சிரமத்தின் மத்தியில் கோழிகளை பராமரித்து வளர்த்து வரும் நிலையில் இவ்வாறு திருட்டுக்கும்பல் செய்யும் நாசாகார வேலையால் தாம் நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

(85)


3. 1kg வெண்டிக்காய் 52.00 ரூபாவாகும். 1kg 750g நிறையுள்ள வெண்டிக்காய்க்காக எவ்வளவு பணத்தை செலுத்த வேண்டும்? ..............................




4. $1\frac{1}{2} + 1 + \frac{1}{2} =$ ..............................

5. இத்திண்ம உருவின் முகங்களின் எண்ணிக்கை யாது? ....................

6. உச்சிகளின் எண்ணிக்கை யாது? ....................

7. 

A யில் இருந்து B வரைக்குமான தூரம் 160m ஆகும். எனின் B யில் இருந்து C வரையுள்ள தூரம் யாது? ..............................

8. 
இவ்வுருவில் காணப்படும் செங்கோணத்திலும் கூடிய கோணங்கள் எத்தனை? ..............

9. 10 மாம்பழங்களின் விலை ரூபாய் 95.00 ஆகும். எனின் ஒரு மாம்பழத்தின் விலை யாது? ................

13) விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் கடையொன்றில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பொருள் | ஒன்றின் விலை | விற்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| விளையாட்டு விமானம் | ரூபா 70 | 10 |
| அசையும் பொம்மை | ரூபா 120 | 03 |
| சிறிய பொம்மை | ரூபா 55 | 10 |
| விளையாட்டுக்கார் | ரூபா 27 | 21 |
| ஊதி | ரூபா 135 | 10 |

1. குறிப்பிட்ட தினத்தில் விற்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............
2. அன்றைய தினம் அசை... ...மையின் விற்பனையால் கிடைத்த பணம் எவ்வளவு? ..............
3. அப்பணம் ஊதிவிற்பனையால் கிடைத்த பணத்தை விட, எவ்வளவால் அதிகமானது? ..............
4. எந்தப்பொருள் விற்பனையால் குறைந்தளவு பணம் கிடைத்தது? ..............
5. ஒவ்வொரு விளையாட்டுப் பொருட்களிலும் ஒவ்வொன்றை வாங்க செலவாகும் மொத்தப் பணம் எவ்வளவு? ..............
6. மு.ப. 9.30க்கு ஆரம்பமான ஒரு பரீட்சை மு.ப. 10.45ற்கு முடிவடைந்தது. எனின் பரீட்சை நடைபெற்ற மொத்த நேரம் யாது? ..............

## விடைகள்

1) காலைக்காட்சி
2) ஒளி – வெளிச்சம்
3) மலை
4) குளிர்நிலவு
5) ஆலயங்களில்
6) விண்மீன்கள், நிலா
7) ஆலயங்கள்
8) நட்சத்திரங்கள்
9) மேல், எழுகிறான்
10) அவை
02) 1. அந்தம்
2. தோய்ந்து
03) i. குலங்கள்
2. தண்டனைகள்
04) 1. பசுக்கூட்டம் புல் மேய்நதது/ பசுக்கூட்டங் கள் புல் மேந்தன
2. தாவரங்கள் காபனீ ரொட் சைட் வாயுவை சுவாசிக்கின் றன.
3. மான்கூட்டங்கள் நீர் அருந்தின.
05) 1. Listen Please
2. May i come in
06) 1. நான் சாப்பிடுகிறேன்.
2. தண்ணீர்போத்தல்
07) 1. நீங்கள் கடைக்குப் போகின்றீர்களா?
2. எனது விளையாட்டு வீடு
08) 1. விஷ்பம் தையல் - மெசின்தையல்
2. புள்ளடித்தையல்.
09) 1.4 2.4 3.2 4.4 5.2 6.1 7.1 8.4 9.2 10.2 11.1 12.2 13.2 14.1 15.3
10) 1. இருவேரி 2. நாயுருவி. 3. இலைப்பசளி 4. ஆடாதோடை
12) 1. 1. திருகோணமலை 2. அம்பாந்தோட்டை
2. 1). கட்டுநாயக்கா
2) இரத்மலானை
12) 1. 4cm 2. 2/775 m/ 3. 91.00 4. 3 5. 04 6. 04 7. 40m 8. 01 9. 9.50 சதம்
10) 1. 54
2. ரூபா 360.00
3. ரூபா 990.00
4. அசையும் பொம்மை
5. ரூபா 407.00
6. 1 மணித்தியாலயம் 15 நிமிடம்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I

# கல்வி முரசு



**(1) பின்வரும் பந்தியை தெளிவாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

பொழுது புலர்ந்தது இருள் கவிழ்ந்து மூடி இருந்த திரை மறைகின்றது. விண்மீன்களதும் தண்ணிலாவினதும் கொட்டம் ஒடுங்குகிறது. சூரியனின் வரவு கண்டு அவை ஒளிமழுங்கித் தோற்று ஓடுகின்றன. ஆலயங்கள் எங்கும் மணியொலி ஆர்க்கின்றது. பூஜைகள் நடைபெறுகின்றன. விண்மிசை வெண்ணிறமாக விளங்கிய ஆதவன் உதய கிரியில் இருந்து மேலெழுகிறான்.

1. பந்தி குறிப்பிடும் காட்சி எதுவாகும்? ..............
2. இருள் என்னும் சொல்லின் எதிர்கருத்துச் சொல்லை தருக? ..............
3. கிரி எனும் சொல்லுக்கு ஒத்த சொல்லை தருக? ..............
4. தண்ணிலா என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது? ..............
5. மணியொலி எங்கு ஆர்க்கின்றது? ..............
6. சூரியனின் வரவு கண்டு எவை ஒளிமழுங்கி தோற்றுப்போகின்றன? ..............
7. அஃறிணை, பன்மை, படர்க்கை, பெயர்ச் சொல் ஒன்றைக் குறிப்பிடுக? ..............
8. விண்மீன்கள் என்றால் என்ன? ..............
9. மேலெழுகிறான் என்பதை பிரித்தெழுதுக? ..............
10. அது எனும் சொல்லின் பன்மைச் சொல்லை தருக? ..............

**(2) பின்வரும் இணைமொழிகளின் குறைகளை பூர்த்தி செய்து எழுதுக.**

1. ஆதி .............................. (அடி, முடிவு, தொடக்கம், அந்தம் )
2. ஆய்ந்து .............................. (தோய்ந்து, காய்ந்து, வறண்டு)

**(3) கோடிட்ட சொல்லுக்கான பொருளை தெரிவு செய்து கோடிடுக.**

1. "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதியார் பாடினார். (மதங்கள், குலங்கள், கிளைகள்)
2. அடித்தாரைச் சொல் ஆக்கினைகள் பண்ணிடுவோம். (சொல்லடிகள், வேதனைகள், தண்டனைகள்)

**(4) பின்வரும் வாக்கியங்களை திருத்தி எழுதுக.**

1. பசுக்கூட்டம் புல் மேய்ந்தன. ..............
2. தாவரங்கள் காபனீரொட்சைட் வாயுவை சுவாசிக்கின்றது. ..............
3. மான்கூட்டம் நீர் அருந்தின. ..............

**(5) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. தயவு செய்து செவிமடுக்கவும் ? .................... 2. நான் உள்ளே வரலாமா? ....................


**(6) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. I am eating .................... 2. Water Bottle ....................

**(7) கருத்தினை தமிழில் எழுதுக.**




1. ஒயா கடேட்ட யனவா த? ....................
2. மகே செல்லம் கெதர ....................

**(8) பின்வரும் தையல் வகைகளின் பெயர்களை குறிப்பிடுக.**

1)  .................... 2)  ....................




**(9) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. கறுப்புநிறத்துடன் கபில நிறமும் கொண்ட பறவை எது?
   1. மரங்கொத்தி 2. பஞ்சவர்ணக்கிளி 3. மீன்கொத்தி 4. செண்பகம்
2. இலங்கையின் தேசிய கொடியில் காணப்படும் அரசிலைகள் பல கருத்துக்களை விளக்குகின்றன அதில் ஒரு கருத்தாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
   1. சத்தியம் 2. வாக்குறுதி 3. விடுதலை 4. காருண்யம்
3. வீட்டுத்தோட்டத்தில் பூச்சிகளை பிடித்து உண்ணக்கூடியது எது?
   1. நத்தை 2. கும்பிடுபூச்சி 3. கருவண்டு 4. வெட்டுக்கிளி
4. வடமாகாணத்தில் அமைந்திராத மாவட்டம் ஒன்று.
   1. வவுனியா 2. முல்லைத்தீவு 3. யாழ்ப்பாணம் 4. மட்டக்களப்பு
5. பூ கோளத்தில் இலங்கைக்கு வடக்கே மிக அருகில் அமையப் பெற்றுள்ள நாடு.
   1. வங்களாதேசம் 2. இந்தியா 3. பூட்டான் 4. பாகிஸ்தான்
6. நல்ல நெல்லிலிருந்து பதர் நெல்லை வேறாக்குவதற்கு பயன்படுவது?
   1. குல்லம் 2. மரக்கால் 3. பரம்புப்பலகை 4. கடகம்
7. பழங்காலத்தில் தகவல்களை அறிவிப்பதற்காக பயன்படுத்தியது?
   1. பறை 2. கடிதம் 3. தந்தி 4. பெக்ஸ்
8. வாழ்க்கை வட்டத்திற்கு அமையத் தனது இனத்தை பெருக்கிக் கொள்ளும் பிராணி.
   1. நத்தை 2. இராமபாணம் 3. திமிங்கிலம் 4. நுளம்பு
9. நீர்ச்சக்கரம் ஒன்றின் சுழற்சியை அதிகரிக்கக்கூடிய வழிகளில் ஒன்று.
   1. பற்சில்லுகளின் எண்ணிக்கையை குறைத்தல்.
   2. பற்சில்லுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
   3. பற்சில்லுகளுக்கிடையிலான இடைவெளிகளை அதிகரித்தல்.
   4. நீர் விழும் உயரத்தின் நீளத்தைக் குறைத்தல்.
10. பச்சையாக உண்ணக்கூடிய உணவு வகைகளை சமைத்து உண்ணும் போது ஏற்படக்கூடிய விளைவு?
    1. போசணைத்தன்மை அதிகரிக்கும். 2. போசணைத்தன்மை குறைவடையும்.
    3. உணவு நஞ்சாகக் கூடும். 4. சுவை குறையும்.
11. வரலாற்றில் வீரம் பொருந்திய மன்னனாக கருதப்படுபவன்.
    1. துட்டகைமுனு 2. காசியப்பன் 3. முகலன் 4. பண்டுகாபயன்
12. குருதிச்சோகை நோய் ஏற்படுவதற்கு காரணம்.
    1. கல்சியம் குறைபாடு 2. இரும்புச்சத்து குறைபாடு
    3. புரதக் குறைபாடு 4. விற்றமின் குறைபாடு
13. வீட்டின் உள்ளே வளர்க்கப்படும் பிராணி
    1. பசு 2. பூனை 3. எலி 4. நாய்
14. நீரை சுத்திகரிக்கப் பயன்படும் இரசாயனப்பதார்த்தம்.
    1. குளோரின் 2. கொண்டிஸ். 3. அற்கஹோல் 4. தேங்காய்எண்ணெய்
15. மின்குமிழ்கள் இரண்டும் ஒளிரும் படி ஒழுங்கு செய்யப்பட்ட அமைப்பு எது?

1.  2.  3.  4. 

**(10) பின்வரும் தாவரங்களுக்கான பெயர்களை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

இலைப்பசளி , நாயுருவி , ஆடாதோடை , இருவேரி , வசம்பு


1. .................... 2. .................... 3. .................... 4. ....................

**(11) வினாக்களுக்கு விடை தருக.**

1. இலங்கையின் துறைமுகங்கள் அமைந்துள்ள இடங்கள் இரண்டைத் தருக?
   1. .................... 2. ....................
2. இலங்கையின் பிரதான விமான நிலையங்கள் இரண்டை தருக?
   1. .................... 2. ....................


**(12) கணித வினாக்களுக்கு விடை தருக.**

1. 4cm அகலமும் 8cm நீளமும் கொண்ட மூன்று காகித அட்டைகளைக் கொண்டு அருகில் உள்ள உரு தயாரிக்கப்பட்டுள்ளது. A,B யின் நீளத்திற்கும் C,D யின் நீளத்திற்கும் இடையிலான வேறுபாடு எவ்வளவு? ....................




2. கலன் ஒன்றில் இருந்த 5l தேனில் 2l 225ml தேன் பாவிக்கப்பட்டால், மிகுதியாக இருக்கும் தேனின் அளவு யாது? ....................


விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2014 - கல்விமுரசு







கிளிநொச்சி பொதுச்சந்தையில் நேற்று இடம்பெற்ற கரைச்சிப் பிரதேச சபையினருக்கு எதிரான கதவடைப்பு போராட்டத்தின் போது கடைகள் மூடப்பட்டிருப்பதையும் சந்தைக்கு வந்த உற்பத்திப் பொருட்களுடன் விவசாயிகள் மொத்த வியாபாரிகள் காத்திருப்பதையும் படங்களில் காணலாம். (29)

# கரைச்சிப் பிரதேச சபையை கண்டித்து

# கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் கதவடைப்பு

கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்கள் நேற்று பிரதேச சபையின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வியாபார நிலையங்களை மூடி போராட்டத்தில் ஈடுப்பட்டனர். கடந்த 19 ஆம் திகதியும் இவ்வாறு கடைகளை மூடி எதிர்ப்பில் வர்த்தகர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பல்வேறு கட்டங்களில் பல பாதிப்புக்களை சந்தித்து தற்போது ஓரளவுக்கு நிம்மதியான நிலையில் வியாபார நடவடிக்கைகளில் கிளிநொச்சி பொதுச் சந்தை வியாபாரிகள் ஈடுபட்டு வருகின்ற நிலையில் அவர்களின் நலன்களை பாதிக்கும் வகையில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் தன்னிச்சையான முறையில் தனக்கு தெரிந்த ஒருவருக்கு சந்தை மரக்கறி பகுதியில் முன் பகுதியில் முதலாவது கடை ஒன்றினை வழங்கியுள்ளார்.

நீண்ட காலமாக மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வியாபாரிகள் உள்ள நிலையில் புதிதாக சந்தையில் சிறு பல் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குறித்த நபருக்கு தவிசாளரினால் மரக்கறி கடைத் தொகுதியில் முதலாவது கடை வழங்கப்பட்ட முறையற்ற சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்றும் கடைகளை மூடி வியாபாரிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கரைச்சி பிரதேச சபை தவிசாளரின் முறையற்ற நடடிக்கை காரணமாக ஒட்டுமொத்த வியாபாரிகளும் பாதிக்கப்படுவதாகவும் பிரதேச சபையினர் வியாபாரிகளின் நலன்களை கருத்தில் எடுக்காது ஒரு சிலரின் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வருவதாகவும் அதனை தவிர்க்குமாறும் வலியுறுத்தியே வியாபார நிலையங்களை மூடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

பொதுச் சந்தையில் உள்ள மரககறி, சிறுபல்பொருள், புடவை, அழகுசாதனம், வெற்றிலை உள்ளிட்ட அனைத்து வியாபாரிகளும் வியாபார நிலையங்களை மூடி எதிர்ப்பில் ஈடுபட்டனர். இதன்போது குறித்த இடத்திற்கு விஜயம் மேற்கொண்ட கிளிநொச்சி உதவி பொலிஸ் அத்தியட்சகா சேனாதிபதி சில்வா மற்றும் கிளிநொச்சி பொலிஸ் பொறுப்பதிகாரி வீரசிங்க ஆகியோர் வியாபாரிகளிடம் பேச்சுவார்த்தை நடாத்தி சந்தை நடவடிக்கைகளை வழமைக்கு கொண்டு வந்தனர்

இதன்போது கரைச்சி பிரதேச சபையினரால் முறையற்ற வகையில் வழங்கப்பட்டதாக கூறப்படும் மரக்கறி தொகுதியின் முதலாவது கடையினை நிரந்தர தீர்வு கிட்டும் வரைக்கும் மூடி வைப்பது எனவும் சந்தை வர்த்தகர்கள் மற்றும் பிரதேச சபை அதிகாரிகளை அழைத்து பேசி தீர்வு காண்பது எனவும் அது வரைக்கும் பொது மக்கள் மற்றும் விவசாயிகளின் நலன்களை கருதி சுந்தை நடவடிக்கைகளை ஆரமபிக்கு மாறும் கோரியதனை அடுத்து சந்தை நடவடிக்கைகள் மு.ப 10.30 மணிக்கு வழமைக்கு திரும்பியது

இதன்போது சம்மந்தப்பட்ட கரைச்சிப் பிரதேச சபையினை சேர்ந்த எவரும் அங்கு சமூகமளிக்கவில்லை. இதனால் காலை ஐந்து மணிக்கு கிளிநொச்சி சந்தைக்குப் பல்வேறு தொலைவில் உள்ள பிரதேசங்களிலிருந்தும் தங்களது உற்பத்தி பொருட்களுடன் வருகை தந்த விவசாயிகள், மொத்த வியாபாரிகள் காத்திருந்த அவலமும் ஏற்பட்டுள்ளது. சில விவசாயிகள் தங்களின் உற்பத்திப் பொருட்களுடன் திரும்பிச் சென்ற சம்பவமும் இடம்பெற்றுள்ளது. (29)

# 4 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களுக்கு

# பார்வைக் குறைபாடு ஏற்படும் ஆபத்து

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் 4 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பார்வைக் குறைபாட்டுக்கு உள்ளாகும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு மதிப்பிட்டுள்ளது.

ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பாடசாலைப் பிள்ளைகள் பார்வைக் குறைபாட்டுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வளர்ந்தவர்கள் பார்வையை இழந்துள்ளனர்.

கண்பார்வையை இழந்துள்ளவர்களுக்குக் கண் பார்வையைப் பெற்றுக் கொடுப்பதையும், கண்பார்வைக் குறை பாட்டுக்குள்ளாவோரை அவ்வச்சுறுத்தலிலிருந்து விடுவிப்பதையும் நோக்கமாகக் கொண்டே சுகாதார அமைச்சு விஷன் 2020 வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கண்ணில் வெள்ளை படர்ந்திருப்பதன் காரணமாக கண் பார்வையை இழந்துள்ள 1000 ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு இவ்வருடம் சத்திர சிகிச்சை மூலம் விழி வெண்படலத்தை அகற்றி பார்வையை மீளப்பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுகைத்தொழில்பேட்டை

# கிழக்கு மாகாணத்தில் உதயம்

## 10 ஆயிரம் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு

"கிழக்கில் முதலீடு செய்யுங்கள்" என்ற திட்டத்தின் கீழ் சுமார் பத்தாயிரம் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தும் சிறு கைத்தொழில் பேட்டைகளை அமைக்கும் பணி நேற்றுமுன் தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் சவுதி அரேபியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் முதலீட்டாளர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

இத்திட்டத்தின் கீழ் முதலாவது கைத்தொழில் பேட்டைக்கான கட்டடத் தொகுதி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் ஐயங்கேணி பிரதேசத்தில் நிறுவப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான கைத்தொழில்பேட்டையில் அதிகளவிலான முஸ்லிம் யுவதிகளும் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் யுவதிகளும் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் மூன்று இனங்களையும் சேர்ந்த யுவதிகளும் தொழில் வாய்ப்பைப் பெறவுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் கட்டம் கட்டமாக வழங்கப்படுகின்றன. பத்திற்கு மேற்பட்ட கைத்தொழில் துறைசார் பயிற்சிகள் இந்த யுவதிகளுக்கு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அரச சொத்துக்கள்

# ஒப்படைக்கப்படவில்லை

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைகள் கலைக்கப்பட்டதன் பின்னர், அவற்றின் முன்னாள் உறுப்பினர்கள் பயன்படுத்திய வாகனங்கள் மற்றும் அரச சொத்துக்கள் மீண்டும் ஒப்படைக்கப்படவில்லை என பவரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டிஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

மாகாண சபைகள் கலைக்கப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ளபோதிலும், இரண்டு மாகாண சபைகளிலும் ஒருவரைத் தவிர ஏனையவர்கள் தமது சொத்துக்களை மீளக்கையளித்தமை தொடர்பில் பதிவாகவில்லை.

அதனால் வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பொறுப்பேற்குமாறு ஆளுநர்கள் மற்றும் பொதுச் செயலாளர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

அத்துடன் குறித்த சொத்துக்களை வேறு காரணங்களுக்காக அரசியல்வாதிகள் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

ஆளுநர்கள் மற்றும் பொது செயலாளர்கள் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவார்கள் என எண்ணுகின்றோம் என்றார்.




வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

பிறந்த ஆண்டு :- ..........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்

# இந்துக்களை தாக்கினால் விளைவு விபரீதமாகும்

## பங்களாதேஷ் பிரதமர்



இந்துக்களை தாக்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா கூறியுள்ளார்.

பங்களாதேஷில் கடந்த 5ஆம் திகதி நடந்த பொதுத் தேர்தலில் சத்கிரா என்ற பகுதியில் வாக்குச்சாவடிகள் தாக்கப்பட்டதுடன், இந்துக்கள் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டது.

அப்பகுதியை பிரதமர் ஷேக் ஹசீனா நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

அப்போது அவர் கூறுகையில், இந்தியாவில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வசிப்பதை யாரும் மறந்து விடாதீர்கள்.

இங்கு இந்துக்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டால், இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் தாக்கப்பட வாய்ப்புள்ளது.

பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் பங்களாதேஷில் சம உரிமையுடன் தொடர்ந்து வசிக்கலாம்.

நாட்டில் மக்களிடையே நிலவும அமைதியை யாரும் சீர்குலைக்கக கூடாது என்று எச்சரிக்கை விடுககிறேன்.

சத்கிரா பகுதியில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் எங்கு பதுங்கியிருந்தாலும் கண்டு பிடிக்கப்படுவார்கள் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

# விமானத்தை தாக்கியது மின்னல்; இந்தோனேஷியாவில் 4 பேர் பலி



இந்தோனேஷியாவில், மின்னல் தாக்கியதில், சிறிய ரக விமானம விழுந்து நொருங்கியதில், நான்கு பேர் உயிரிழந்தனர். இந்தோனேஷியாவின், பப்புவா என்ற இடத்திலிருந்து, மலுகு தீவிற்கு, நான்கு பேருடன் சிறிய ரக விமானம், நேற்றுமுன் தினம் புறப்பட்டு சென்றது. எண்ணெய் மற்றும் எரிவாயு குறித்து ஆய்வு செய்வதற்காக, இரண்டு பொறியியலாளர்கள் இந்த விமானத்தில் சென்றனர்.

திடீரென ஏற்பட்ட மின்னல், விமானத்தின் இடது இறக்கை மீது தாக்கியது. இதனால், இறக்கை சேதமடைந்து, விமானம் நிலை தடுமாறி, தரையில் விழுந்து மோதி, வெடித்து தீப்பிடித்தது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த நால்வரும் உயிரிழந்தனர்.

# சீனாவில் 3 கோடி ஆண்களுக்கு மணப்பெண் தேடும் படலம்



சீனாவில் பெண்களின் விகிதம் குறைந்து வருவதால் அந்நாட்டில் 3.4 கோடி ஆண்கள் வெளிநாட்டினரை திருமணம் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

உலகில் மக்கள்தொகை அதிகம் கொண்ட நாடு சீனா. 2013 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி அந்நாட்டில் 69.7 கோடி ஆணகள், 66.3 கோடி பெண்களும் உள்ளனர்.

அந்த வகையில் பெண்களை விட 3.4 கோடி ஆண்கள் அதிகமாகவுள்ளனர். இதனால் வெளிநாட்டுப் பெண்களை மணக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆண்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

சீனாவில், பெண்களின் எண்ணிக்கையும் குறைந்து திருமண வயதுக்கான ஆண்-பெண் விகிதாசாரம் சமமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் வியட்நாம் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதிலும், பெண்களின் விகிதத்தை சமப்படுத்துவதிலும் சீன ஆண்கள் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

# பேய் விரட்டுவதாக கூறி இரு குழந்தைகளை கொன்ற தாய்



(நியூயோர்க்)

அமெரிக்காவில் பேய் விரட்டுவதாகக் கூறி தன்னுடைய இரு குழந்தைகளையும் கொலை செய்த தாயால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மேரிலாண்ட் பகுதியைச் சேர்ந்தவர் சாகியா லாட்ரிஸ்(வயது 28).இவர் பேய் ஓட்டுவதாக கூறி, நோரல் ஹாரிஸ் என்ற ஒரு வயது குழந்தையையும், சயனா ஹாரிஸ் என்ற இரண்டு வயது குழந்தையையும் கொடூரமாக கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து பொலிசார் கூறுகையில், குழந்தைகள் தூங்கி கொண்டிருக்கும் போது மிக கொடூரமாக தாக்கிக் கொலை செய்துள்ளார், இதனால் குழந்தைகளின் உடலில் பல்வேறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதில் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்த குழந்தைகள் பரிதாபமாக பலியாயினர் என்று தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பலத்த காயமடைந்த நிலையில் 5 மற்றும் 8 வயதுடைய சிறுவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவங்களின் அடிப்படையில் குறித்த பெண் மீது கொலை மற்றும் கொலை முயற்சி வழக்கில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# வீரப்பன் குழுவினரின் மரணதண்டனை ஆயுள் தண்டனையாக குறைப்பு



வீரப்பன் குழுவைச் சேர்ந்த 4 பேரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. வீரப்பன் குழுவைச் சேர்ந்த சைமன், பில்வேந்திரன், ஞானபிரகாசம், மீசை மாதையன் ஆகிய 4 பேரும், கடந்த 1993 ஆம் ஆண்டு தமிழக கர்நாடாக எல்லையான பாலாறு பகுதியில் கண்ணி வெடித் தாக்குதல் நடாத்தியதில் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 22 பேர் பலியாகினர்.

22 பேர் பலியாக காரணமாக இருந்ததாக 4 பேர் மீதும் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்து வந்த கர்நாடகா மாநில மைசூர் தடா நீதிமன்றம், கடந்த 2001-ஆம் ஆண்டு வீரப்பன் 4 பேருக்கும் மரணதண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது. தடா நீதிமன்றத்தின் மரண தண்டனையை எதிர்த்து 4 பேரும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். ஆனால் உச்ச நீதிமன்றமும் 2004 ஆம் ஆண்டு மரண தண்டனையை உறுதி செய்து தீர்ப்பளித்தது.

இதனையடுத்து, மரண தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைக்க கோரி 4 பேரும் 2004-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் குடியரசுத் தலைவருக்கு கருணை மனுக்களை அனுப்பினர். அந்த மனுக்களை ஒன்பது ஆண்டுகள் கழித்து கடந்த ஆண்டு (2013) பெப்ரவரி மாதம் குடியரசுத் தலைவர் நிராகரித்தார்.

இதனையடுத்து, கருணை மனுக்களை நிராகரிக்க நீண்ட காலம் எடுத்துக் கொண்டதால், மரண தண்டனையை குறைக்க கோரும் உரிமையுள்ளது எனக் கூறி, நால்வர் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் கடந்த பெப்ரவரி மாதம் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை முடிவடைந்த நிலையில், நேற்று உச்ச நீதிமன்றம் வீரப்பன் குழுக்கள் 4 பேரது மரண தண்டனையையும் ஆயுள் தண்டனையாகக் குறைத்து தீர்ப்பு அளித்துள்ளது.

# மலேசியா எதிர்க்கட்சித் தலைவர் ஜப்பானுக்குள் நுழையத் தடை



மலேசிய எதிர்க்கட்சித் தலைவருக்கு ஜப்பான் நாட்டுக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானுக்குள் நுழைய அனுமதியில்லை என்று கூறி மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். ஜப்பானின் இந்தச் செயலால் அதிர்ச்சியடைந்துள்ளதாக அன்வர் இப்ராஹிம் கூறினார்.


ஜப்பானின் டோக்கியோவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய அன்வர் இப்ராஹிமை, நாட்டுக்குள் நுழைய அனுமதியில்லை எனக் கூறி குடியேற்றத்துறை அதிகாரிகள் திருப்பி அனுப்பிவிட்டனர். பாலியல் புகார், ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான வழக்குகளில் 1999ஆம் ஆண்டு அவர் தண்டனை பெற்றுள்ளதைக் காரணம் காட்டி அவரை நாட்டுக்குள் அனுமதிக்க ஜப்பான் மறுத்து விட்டது. இதையடுத்து மற்றொரு விமானத்தில் அவர் உடனடியாக மலேசியாவுக்கு திரும்பினார்.

கருத்தரங்கில் பங்கேற்க வருமாறு ஜப்பானிலுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனம் விடுத்த அழைப்பின் பேரிலேயே அவர் அந்நாட்டுக்குச் சென்றிருந்தார்.

தன்னை ஜப்பானுக்குள் அனுமதிக்க மறுத்துவிட்டது குறித்து அன்வர் இப்ராஹிம் கோலாலம் புரில் செய்தியாளர்களிடம் கூறுகையில் இந்தச் சம்பவத்தால் குழப்பமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளேன். இது தொடர்பாக மலேசிய அரசு விசாரணை நடத்த வேண்டும். வழக்கில் என்னைக் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் தான் அனுமதிக்கவில்லை என ஜப்பான் கூறுவது உண்மையான காரணம் அல்ல. ஏனெனில், 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு மூன்று முறை எந்தவிதமான பிரச்சினையுமின்றி ஜப்பான் சென்று வந்துள்ளேன். அதோடு இந்த முறை ஜப்பான் புறப்பட்ட போது, மலேசியாவிலுள்ள ஜப்பான் தூதரகம் எந்தவிதமான ஆட்சேபமும் தெரிவிக்கவில்லை.

ஆனால்,, ஜப்பான் சென்ற பிறகுதான் தடுத்து நிறுத்தியுள்ளனர். என்னை ஜப்பானுக்குள் செல்ல விடாமல் தடுக்க மறைமுகமாக சிலர் செயற்பட்டுள்ளனர் என்றார்.

# 100 அடி நீள சொகுசு கார்



உலகிலேயே மிக நீளமான சொகுசுக்கார் ஒன்றை கலிபோர்னியாவிலுள்ள ஜே ஓபெர்க் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தக் காரின் நீளம் 100 அடி ஆகும் 26 சக்கரங்களைக் கொண்ட இந்தக் காரில், ரயில்களில் உள்ளது போல் முன்பகுதியில் ஒரு சாரதி அறையும் பின் பகுதியில் ஒரு சாரதி அறையும் அமைந்துள்ளது.குறுகிய தெருக்களிலும் சுலபமாக திரும்பும் வகையில், காரின் நடுப்பகுதி வளைந்து, மடியும் வகை யில் அமைக்கப்பட்டுள்ளது. வெறும் கண்காட்சிகளில் வைக்கும் நோக்கத்தில் மட்டுமே இந்தக் கார் முதலில் தயாரிக்கப்பட்டது.

ஹொலிவூட்டில் உள்ள ஆடம்பர பங்களாவுக்கு இணையாக இந்தக் காரின் உள்ளே, அனைத்து சொகுசு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. குளியல் தொட்டி பார், ஹெலிபேட், செயற்கைக் கோள் தொடர்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய மினி அரண்மனை போல் உள்ளது

# கண்டாவளை பிரதேசத்திற்கு மின்விநியோகம் வழங்கல்



கடந்த சில மாதங்கலாக இழுபறி நிலையில் இருந்து வந்த கண்டாவளை மற்றும் வட்டக்கச்சி பிரதேசங்களுக்கு மின் விநியோகம் வழங்கப்படுவதை யிட்டு தாம் மகிழ்வடைவதாக ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கண்டாவளைப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மின் விநியோகத் திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்டாவளை மற்றும் வட்டக்கச்சி ஆகிய இரு பிரதேசங்களுக்கும் மின்சாரத்திற்கும், வீதிக்குமாக கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவந்தது. ஆனால், மின்சாரம்தான் முதலில் நடைமுறைக்கு வந்தது அதுவும் பெரும் பிரயத்தனங்களின் மத்தியில்தான் கொண்டுவரப்பட்டது.

இந்தப் பிரதேசத்திற்கு மின்சாரத்தைக் கொண்டுவருவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்ததார். இந்தவிடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கின் வசந்தம்மின் விநியோகத்திட்ட முகாமையாளரிடம் கிட்டத்தட்ட நூறு தடவைகளுக்கும் மேல் பேசியிருப்பார் இது யாருக்கும் வெளியில் தெரியாது.

கண்டாவளைப் பிரதேசத்தின் மின்சார விநியோகம் மற்றும் வீதி அபிவிருத்தி பணியினை எப்படி நகர்த்தலாம், யாரிடம் அந்த விடயங்களை எடுத்துரைத்து சரியான வழிமுறையில் செய்யலாம் என்று நம்பும் ஒருபகுதியினரும், இதனை சர்ச்சையாக்கி பத்திரிகைகளில் வரச்செய்து அல்லது அரசியல் மேடைகளில் அதைப் பேசி குறைகளை மட்டுமே கூறி அதற்கு எண்ணெயை ஊற்றக் கூடிய வகையில் செயற்படுபவர்கள் என இரண்டு பகுதியினர் இருந்தனர். இன்று அதற்கு முடிவுகட்டப்பட்டுள்ளது என்றார்.



ஆசிய பவுண்டெசனின் நிர்வாக உறுப்பினர் குழு நேற்று யாழ். நகரிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தது. இதன்போது நிர்வாகக் குழுவினர் நேற்று நண்பகல் வடமாகாண ஆளுநரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது பிரதம செயலாளர் விஜயலக்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(படம் ஆர்.இராஜகுமார்)

# இ.போ.ச. சாரதி மீது தாக்குதல்; மினிபஸ் சாரதி உட்பட இருவர் கைது

(ஊர்காவற்துறை)

புன்னாலைக்கட்டுவானிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பேருந்துச் சாரதியை அதே வழிப்பாதையில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து சாரதி கடுமையாக தாக்கிய சம்பவம் இடம் பெற்றுள்ளது.

புன்னாலைக்கட்டுவனிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபட்ட குறித்த பேருந்து நேற்றுக்காலை 9.20 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த நிலையில் அவ்வழியூடாக வந்த தனியார் பேருந்து சாரதி அரசபேருந்தை முந்திக் கொண்டு சென்று அரச பேருந்தை வழிமறித்து நிறுத்திய சாரதி அரச பேருந்து சாரதியை கடுமையாக தாக்கியுள்ளார். அத்துடன் தனியார் பேருந்து நடத்துனரும் அரச பேருந்து நடத்துனரின் பயணச் சீட்டு புத்தகத்தை கிழித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் அரச பேருந்து சாரதியான செ. செயந்தன் (வயது -30) என்பவரே தாக்குதலுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் தனியார் பேருந்து சாரதியையும் நடத்துனரையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வட மாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவர் கே.புவி தெரிவிக்கையில்,

தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துனரின் செயற்பாடு கண்டிக்கத்தக்க விடயமாகும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுமாயின் பகிஷ்கரிப்பு ஈடுபடநேரிடுவதுடன் யாழ். பிரதான பேருந்து நிலையத்திலிருந்து தனியார் பேருந்துகளை எடுக்க வேண்டி நோரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (65)

### இலங்கையில்...

இலங்கையின் நிலைமைகளையும் கள யதார்த்தங்களையும் தாம் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளதாக ஷேக் முஹமட் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் முதலீடுகளை அதிகரிப்பதற்கும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கும் ஷேக் முஹமட் தனது விருப்பத்தை தெரிவித்தார். ஜனாதிபதி ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை பாராட்டிய பிரதமர் ஷேக் முஹமட், பல வருடங்களுக்குப் பின்னர் இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுள்ள சூழ் நிலையில், இலங்கையில் தற்போது முதலீட்டுக்கான சிறந்த சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஷேக் முஹமட்டிற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டார். பேச்சுவார்த்தையின் நிறைவில் டுபாய் ஆட்சியாளர் எழுதிய ஒரு கவிதை நூலை ஜனாதிபதிக்கு அன்பளிப்பாக வழங்கினார். வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்தனவும் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டார்.

### அழுத்தம்...

கையுடன் இணைந்து திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அவர் யோசனை தெரிவித்தார்.

தமது நாடு இத்துறைகளில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். இரு தரப்பு உறவுகளை பலப்படுத்த இணக்கம் தெரிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கை அடைந்து வரும் முன்னேற்றங்களையும் தெளிவுபடுத்தினார்.

அனைத்து நிலக்கண்ணி வெடிகளும் அகற்றப்பட்டுள்ளன 3 இலட்சம் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். 11 ஆயிரம் முன்னாள் போராளிகள் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர். 2 ஆயிரம் சிறுவர் போராளிகள் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

நெடுஞ்சாலைகள், சுகாதாரம், நீர்ப்பாசனம், மின்சாரம், கல்வி ஆகிய துறைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்த ஜனாதிபதி வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு அம்மக்களின் விருப்பத்திற்கு இணங்க அவர்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# காணாமற்போனோர் பற்றிய புதிய முறைப்பாடுகளும் பரிசீலிக்கப்படும்

## ஜனாதிபதி ஆணைக்குழுத்தலைவர் தெரிவிப்பு

பயங்கரவாதம் நிலவிய காலப்பகுதியில் வடக்கில் காணாமற்போனோர் தொடர்பான தகவல்களைக் கண்டறியவே இவ்வாணைக்குழு நியமிக்கப்பட்டது. காணாமற்போனோர் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளை ஆராயும் பணிகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு நேற்று நிறைவடைந்தது.

காணமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு கிடைக்காதவர்களுக்கு இப்போது தமது முறைப்பாடுகளை சமர்ப்பிப் பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. கிளிநொச்சி மாவட்டத்தில் விசாரணைகள் இடம்பெறும் விதம் தொடர்பாக மாலை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் காணமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் கருத்து தெரிவித்தார்.

காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் கருத்து தெரிவிக்கையில் சுமார் 152 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஏற்கனவே முறைப்பாடுகள் செய்தவர்களை தவிர புதிதாகமுறைப்பாடு செய்வதற்கும் பலர் வருகை தந்திருந்தனர். அந்த முறைப்பாடுகளையும் நாம் விசாரித்தோம்.

மேலும் புதிதாக முறைப்பாடுகளை செய்தவர்களுக்கு பிறிதொரு தினத்தை ஒதுக்குவதாக நாம் தெரிவித்தோம். நாம் அவர்களுக்கு பதிவு தபாலில் அறிவிக்கவுள்ளோம். இதனை விசாரிப்பதற்கு அதிகாரம் இருந்தபோதிலும் தண்டனை வழங்கும் அதிகாரம் எமக்கு இல்லை. குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க எம்மால் முடியாது எமது அறிக்கையின் ஊடாக ஜனாதிபதியிடம் பரிந்துரைகளை சமர்ப்பிக்க முடியும். தேவையான ஆலோசனைகளை வழங்கும் அதிகாரம் எமக்குண்டு.

கற்றபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைக்கு ஏற்ப இவ்வாணைக்குழு நியமிக்கப்பட்டது. காணாமற் போனோரின் உறவினர்கள் மன உழைச்சலுக்குட்பட்டிருப்பதை ஜனாதிபதி தெளிவாக புரிந்து கொண்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

### இந்திய மீனவர்கள்...

தாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்குக் கொண்டுவரப்பட்டு இவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாக யாழ். கடற்தொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

### ராஜீவ்...

அரசாங்கம் கருணை மனுக்கள் தொடர்பில் பரிசீலிப்பதற்கு பல வருடங்களுக்கு காலம் தாழ்த்த முடியாது என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இந்த முடிவு காரணமாக இந்திய சிறைகளில் உள்ள பல மரணதண்டனைக் கைதிகள் விடயத்திலும் தீர்மானங்களும் தீர்ப்புக்களும் வெகுவிரைவில் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

### மாலைதீவு...

மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு அமைச்சர் றிசாட் பதியுதினை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, அப்துல்லா யமீன் அப்துல்லா கயூம் இன்று சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன், அதன்பின்னர் முக்கியமான சில புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

அத்துடன் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் மாலைதீவு ஜனாதிபதி மத்தல விமான நிலையத்திற்கும், அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கும் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பௌதீகத்திட்ட...

தொடர்ந்து மாநகர சபையின் செயற்பாடுகள், தொடர்பாக விளக்க படம் கண்பிக்கப்பட்டதுடன் வருகை தந்த நிர்வாகிகளுக்கு நினைவுச் சின்னங்களும், பரிசுப் பொதிகளும் வழங்ககப்பட்டு மாநகர முதலிவரினால் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது ஆசிய பவுண்டேசன் தலைவர் மாநகர சபையின் செயற்பாடுகள், முன்னெடுக்கப்பட்டம் செயற்திட்டங்கள் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இதன்போது மாநகர ஆணையாளர் உஸ். பிரணவநாதன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ)

# உண்ணாவிரதம் நிறைவடைந்தது

வடகிழக்கில் உள்ளக இடப்பெயர்விற்குள்ளானவர்களிற்கு உலர்உணவு நிவாரணம் வழங்கவும் மீளக்குடியமர்த்தவும் கோரி கூட்டமைப்பு பிரமுகர் தம்பிராசா கடந்த 16ஆம் திகதி முதல் முன்னெடுத்து வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மதியத்துடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகம் முன்பாக இடம் பெற்ற இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம் மற்றும் சித்தார்த்தன் ஆகியோர் இணைந்து மென்பானம் வழங்கி முடித்து வைத்தனர்.

### மன்னார்...

புதிதாக தோண்டப்பட்ட பகுதியில் மனித எலும்புத்துண்டுகள் சில கண்டு பிடிக்கப் பட்டன.

எனினும் முழுமையான மனித எலும்புக்கூடுகள் எவையும் கண்டு பிடிக்கப்படவில்லை.

இதேவேளை நாளை மீண்டும் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் குறித்த மனிதப் புதைகுழி தோண்டப்படவுள்ளது.

மனிதப் புதைகுழி தொடர்பாக அநுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ன கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டு வரும் மனித எலும்புக்கூடுகள் அதன் மரணம் சம்பவித்த விதத்தினை அறிந்து கொள்ள நீண்ட நாட்கள் எடுக்கும்.

குறித்த மனிதப் புதைகுழியில் இருந்து தொடர்ச்சியாக மனித எலும்புக்கூடுகள் மாத்திரமே மீட்கப்பட்டு வருகின்றன.

பாரியளவிலான தடயப் பொருட்கள் எவையும் இதுவரை மீட்கப்படவில்லை.

குறித்த ம்னிதப் புதைகுழியின் எல்லை எதுவரை உள்ளது என்பதனை கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ளோம் என்றார்.

# மனித உரிமை பாதுகாப்பு விவகாரம் எந்த முன்னேற்றமும் இதுவரை இல்லை

## பிரிட்டிஷ் அரசு அறிக்கை

(கொழும்பு)

கடந்த மூன்று மாதங்களில் இலங்கையில் மனித உரிமை நிலைவரங்கள் எந்த வகையிலும் மேம்படவில்லை என்று பிரிட்டனின் வெளியுறவு மற்றும் கொமன்வெல்த் நாடுகளுக்கான அமைச்சகம் தனது அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

உலகளவில் 27 நாடுகளிலுள்ள மனித உரிமைகள் நிலவரம் குறித்து நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டுள்ள அறிக்கை, கடந்த அக்ரோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் அந்த நாடுகளில் மனித உரிமைகள் நிலைவரம் எப்படியிருந்தது என்பதை விபரிக்கிறது.

கடந்த ஆண்டு இலங்கையில் கொமன்வெல்த் மாநாடு நடைபெற்ற போது, மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் பார்வை அதன் மீது கூடுதலாக இருந்தபோதிலும், அதில் முன்னேற்றத்தை காண முடியவில்லை என்று பிரிட்டிஷ் அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

கொமன்வெல்த் கூட்டத்தின் போது கொழும்பு செல்வதிலிருந்து தடுக்கப்பட்ட ஒரு பெண். தமது இந்தக் கருத்துக்கு ஆதாரமாக சில விடயங்களை அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. கொழும்பில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற மனித உரிமைகள் தொடர்பான ஒரு நிகழ்வில் பங்குபெற வடபகுதியைச் சேர்ந்த, காணாமல் போனோரின் உறவினர்கள் கொழும்பு போக முற்பட்ட வேளையில், இராணுவத்தினரால் அவர்கள் தடுக்கப்பட்டனர் என்று கூறும் அந்த அறிக்கை, நவம்பர் மாதம் 14 ஆம் திகதி அந்த நிகழ்வின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் கூறுகிறது.

அந்த நிகழ்வுக்கு சென்ற ஒரு தமிழ் இளைஞர் பொலிஸாரினால் தற்காலிகமாக தடுத்து வைக்கப்பட்டார் என்றும், தாக்குதலுக்கு உள்ளானார் எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

அதேபோல கொழும்பில் அதேமாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மனித உரிமை ஆர்வலர்கள் மெழுகுவர்த்திகளை ஏந்தியபடி முன்னெடுத்த விழிப்புணர்வு நடவடிக்கையை தடுக்கும் நோக்கில் நீதிமன்றத்திலிருந்து ஒரு தடையாணையை பெற்றனர் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. அதேபோல கொமன்வெல்த் மாநாட்டின் போது ஊடகவியலாளர்கள் அச்சுறுத்துப்பட்டு பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையின் வெளியுறவு அமைச்சர், சாட்சிகளுக்கான பாதுகாப்புச் சட்டம் நாட்டில் முன்னெடுக்கப்படுவதையும் அதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கடந்த டிசம்பரில் தெரிவித்திருப்பது ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கை என்றும் பிரிட்டிஷ் அரசின் வெளியுறவு மற்றும் காமன்வெல்த் அமைச்சம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தங்கம் கடத்திய இளைஞன்கைது

(கொழும்பு)

டுபாயில் இருந்து இலங்கைக்கு மலவாயிலில் மறைத்து தங்கம் கடத்தி வந்த 29 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் குறித்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார். குறித்த நபரின் மலவாயிலில் இருந்து 9,000,000 பெறுமதியான 1800 கிராம் நிறையுடைய 18 தங்க பிஸ்கட்கள் மீட்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். கைது செய்யப்பட்ட நபரிடம் சுங்கப் பிரிவினர் தொடர்ந்து விசார்ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதை வஸ்து வர்த்தகம்; பொலிஸ் அதிகாரிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள வெல்லம்பிட்டிய முன்னாள் பொறுப்பதிகாரியை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியளில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸ் பிறப்பித்துள்ளார். இதனிடையே, வெல்லம்பிட்டிய காவற்துறை நிலைய முன்னாள் பொறுப்பதிகாரியின் மனைவியை பிணையில் செல்ல நீதவான் அனுமதித்துள்ளார்.

10 இலட்சம் ரூபா வீதம் இரண்டு சரீரப் பிணையில் செல்ல நீதவான் அனுமதித்துள்ளார். இதுவிர, ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் முன்னிலையாக வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

# விஜய் இரசிகர்கள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்கு எதிராக யாழ்ப்பாண விஜய் இரசிகர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றினை நடத்தியுள்ளனர்.

நேற்று மதியம் 12 மணியளவில் மேற்படி பத்திரிகை அலுவலகத்தின் முன்னால் ஒன்று கூடிய இளைஞர் குழுவினர் விஜய் நடித்து வெளியாகிய ஜில்லா திரைப்படம் தொடர்பாக மேற்படி பத்திரிகை பிரசுரித்த திரை விமர்சனத்தை ஆட்சேபித்ததுடன், இந்த பத்திரிகை நிறுவனம் தம்மிடம் மன்னிப்பு கேட்குமாறும் கேட்டு பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இதன் போது "எங்களிடம் மன்னிப்பு கேள் " 'ரசிகர்களின் மனங்களை காயப்படுத்தாதே', 'பிழையை திருத்து', 'ஜில்லா வெற்றி நடை போடுகிறது' பல கோடிகளை வசூலிக்கிறது ஜில்லா போன்ற வாசகங்களை ஏந்தி கோஷம் எழுப்பினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# குளத்தில் மூழ்கி இளைஞன் பலி

(முல்லைத்தீவு)

குளத்தில் நீராடச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தார். இச்சம்பவம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவில் கரும்புள்ளியான் குளத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் நட்டாங்கண்டலைச் சேர்ந்த ஏ.ஜெனிஸ்ரியன் (வயது - 18) என்ற இளைஞனே மரணமடைந்துள்ளார். இவருடைய உடல் மல்லாவி வைத்தியசாலையில் மரண விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிடங்கு வெட்டிய போது வெளிக்கிளம்பியது வெடிகுண்டு

(யாழ்ப்பாணம்)

புதிதாக யாழ். மகாத்மாகாந்தி வீதியில் நிர்மானிக்கப்படும் யாழ். ஹோட்டல் வளாகத்தில் இருந்து நிர்மாணப்பணிகளுக்கென வெட்டப்பட்ட குழியில் இருந்து அகற்றப்பட்ட மண்ணுடன் வெடிக்காத ஷெல் குண்டு ஒன்று வெளிவந்துள்ளது.

நீண்ட காலமாக அந்தவளாகத்தில் நிலத்திற்குள் புதைந்திருந்த இந்தக்குண்டு யுத்தகாலத்தின் போது அப்பகுதியில் வீழ்ந்து வெடிக்காத நிலையில் மண்ணுக்குள் புதைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிர்மாணப்பணிகளின் போது வெட்டி அள்ளப்பட்ட மண் வீதிக்கு எதிரேயுள்ள வளாத்தில் போடப்பட்ட போதே இந்த ஷெல குண்டு இனம் காணப்பட்டுள்ளது. இது குறித்து படையினருக்கும் பொலிசாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டதனை அடுத்து அவர்கள் இந்த வெடிகுண்டினை பாதுகாப்பாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# சமநிலையில் முடிந்தது இறுதி ஆட்டம் சென்.பக்றிக்ஸ் - மானிப்பாய் இந்து சமபலநிலையில்



(மானிப்பாய்)

யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி சமநிலையில் நிறைவுற்றது. நேற்று மின்னொளியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இறுதிப் போட்டி இடம்பெற்றது.

இடம்பெற்ற இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மோதின. இரு அணிகளும் சமபலம் மிக்கவை என்பதால் போட்டிகள் விறுவிறுப்பாக இடம்பெற்றது.

முதற்பாதியின் போது இரு அணிகளும் மாறி மாறி எதிரணி கோல் கம்பங்களை ஆக்கிரமித்த போதும் கோலெதனையும் பெறவில்லை. இதன் படி முதல் பாதி 0:0 என்ற நிலையில் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியின் 18 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை சாதமாக்கிய மானிப்பாய் இந்து வீரன் அகிலன் கோலொன்றினைப் போட்டார். பதிலுக்கு கோல் போடுவதற்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி பல வழிகளில் முயற்சித்தது.

இதன் பலனான 23 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை சென் பற்றிக்ஸ் கல்லூரி வீரன் ஜெராட் கோலக்கினார். இதனால் போட்டி 1:1 என்னும் விறுவிறுப்பான நிலைக்கு வந்தது. தொடர்ந்து கோலெதுவும் பெறப்படாமையால் போட்டி 1:1 என்று நிறைவுக்கு வந்தது.

சமநிலை உடைப்பு உதை வழங்கப்படவிருக்கையில் இரு அணிகளினதும் ஆதரவாளர்கள் மைதானத்தை ஆக்கிரமித்தனர். அவர்கள் மைதானத்தை விட்டு வெளியேறாமையால் போட்டி விதிமுறைகளுக்கமைவாக போட்டியில் இரு அணிகளும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

போட்டியில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் குருகுலராஜா கலந்து கொண்டார். வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்னல்ட், எதிர்வீரசிங்கம் உட்பட்ட பலர் இவ்நிகழ்வில் கலந்து கொண்டனர். (48,93)

# பருத்தித்துறையில் திருடர்கள் கைவரிசை; 15 பவுண் நகைகள் அபகரிப்பு

## திருடர்களைத்தேடி பொலிஸார் வலைவீச்சு

(வடமராட்சி)

பருத்தித்துறை புலோலி பத்தளைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீடு ஒன்றினுள் முகத்தினைக் கறுப்புத் துணியால் கட்டியபடி புகுந்த 4 திருடர்கள் 15 பவுணுக்கு மேற்பட்ட தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், குறிப்பிட்ட இடத்தினைச் சேர்ந்த சுப்பிரமணியம் அருளானந்தம் என்பவரின் வீட்டினுள் இரவு 11.30 மணிக்கு புகுந்த திருடர்கள் கையில் கத்திகள் சகிதம் சென்று அவர்களை அச்சுறுத்தியதுடன், வீட்டு உரிமையாளரின் மனைவியின் கையில் அணிந்திருந்த 2 பவுண் காப்பு, ஒன்றரைப்பவுண் சங்கிலி என்பவற்றை பறித்ததுடன், தாலிக்கொடியை எடுத்துவருமாறு கத்திமுனையில் அச்சுறுத்தியுள்ளார்கள்.

பயம் காரணமாக வீட்டு உரிமையாளரின் மனைவி பெட்டியில் இருந்த பன்னிரண்டே கால் பவுண் தாலிக்கொடியையும், எடுத்துக்கொடுத்துள்ளார். அத்துடன் தொலைபேசியைப் பறித்த திருடர்கள் அதனுள் இருந்த சிம் அட்டையினையும் எடுத்துச்சென்றுள்ளார்கள்.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைய டுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (116)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.